Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, NOVEMBER 20, 2021

சனிக்கிழமை, 20 நவம்பர் 2021 | ஒளி: 07 கதிர் 158 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## பொதுச்சுடர் பீடம் தகர்ப்பு

மன்னார், ஆட்காட்டிவெளி துயிலும் இல்லத்தில் இருந்த பொதுச்சுடர் ஏற்றும் பீடம் நேற்று முன்தினம் தினம் இரவு இனந்தெரியாதவர்களினால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

# கார்த்திகை வீரர்களுக்காக முடியுமெனில், மாவீரர்களை ஏன் நினைவுகூர முடியாது?

### ரவிகரன் கேள்வி; பாரபட்சத்தையும் கண்டித்தார்

■ விஜயரத்தினம் சரவணன்



யாழில் கடந்த 13ஆம் திகதியன்று கார்த்திகை வீரர்களின் ஞாபகார்த்தம் என்னும் பெயரில் நினைவேந்தல் நிகழ்வொன்றினை ஜே.வி.பி கட்சியினர் மேற்கொண்டுள்ளனர். கார்த்திகை வீரர்களை நினைவேந்த முடியுமெனில், நாம் ஏன் மாவீரர்களை நினைவேந்த முடியாதென வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை மாவீரர் நாளினைத் தடுப்பதற்காக நீதிமன்றிலே வழக்குத்தாக்கல் செய்யும் பொலிஸார், கார்த்திகை வீரர்களின் நினைவேந்தலை தடுக்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கேள்வி எழுப்பிய அவர், பொலிஸாரின் இந்தப் பாரபட்சமான செயற்பாட்டினையும் வன்மையாகக் கண்டித்தார்.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிக்குள் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த தடை செய்யக்கோரி, முல்லைத்தீவு பொலிஸார், கடந்த 17ஆம் திகதியன்று வழக்குத் தாக்கல் செய்தனர்.

அந்த வழக்கை ஆராய்ந்த முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா, முல்லைத்தீவு பொலிஸ், பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட பன்னிரெண்டு பேருக்கு மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த தடை விதித்து உத்தரவிட்டிருந்தார்.

தொடர்ச்சி P2



# சாதாரண திருப்பலி, பூஜைகளுக்கு எவ்விதமான தடையும் இல்லை

### மன்னார் பொலிஸாரின் விண்ணப்பம் நிராகரிப்பு

### சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் தலைமையிலான சட்டத்தரணிகள் இணைந்து விண்ணப்பம்

■ றொசேரியன் லெம்பேட்

மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளடங்கலாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் இணைந்து தாக்கல் செய்திருந்த விண்ணப்பத்தை மன்னார் நீதிமன்றம் நேற்று (19) நிராகரித்தது. தொடர்ச்சி P2

### புதிய கொத்தணிகள் இனங்காணப்பட்ட பகுதிகளை

# தனிமைப்படுத்த திட்டமில்லை

### காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை உட்பட ஐந்து மாவட்டங்களில் கொத்தணிகள்

### அனுமதி பெறாத நிகழ்வுகளை தவிர்க்க வேண்டும்

### பொதுக் கூட்டங்களால் கொத்தணிகள் தோன்றின



புதிய கொவிட்-19 கொத்தணிகள் கண்டறியப்பட்ட எந்தப் பகுதியையும் தனிமைப்படுத்த உடனடித் திட்டம் எதுவும் இல்லையென சுகாதார அமைச்சு நேற்று (19) தெரிவித்துள்ளது. “வைரஸ் பரவுவதை தடுப்பதே முதல் நடவடிக்கை” என சுகாதார அமைச்சின் பேரிடர் தயார்நிலை மற்றும் பதிலளிப்பு பிரிவு தலைவர் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். வைரஸ் பரவுவதால் ஏற்படும் ஆபத்து மற்றும் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# யொஹானிக்கு பாராளுமன்றில் செவ்வாயன்று பாராட்டு நிகழ்வு

### பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் ஏற்பாடு



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிகவும் பிரபலமாகியிருக்கும் ‘மெனிகே மகே ஹிதே’ எனும் பாடலை பாடிய, புதிய தலைமுறைப் பாடகியான யொஹானி திலோகா டி சில்வாவைப் பாராட்டும் நிகழ்வொன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (23) பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

தொடர்ச்சி P2

# கஞ சாகரவின் உதவியாளர் ஆர்மி அமில கைது

தங்கல்ல, தங்கெட்டிய பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் கஞ சாகர என்பவரின் உதவியாளரான ஆர்மி அமில பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 3,780 மில்லி கிராம் ஹெரோயினும் வாளொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. ஆர்மி அமில சில கொலை சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளவர் என தெரியவந்துள்ளது.

நாட்டின் சில பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் தாக்குதல்களுடன் சந்தேகநபர் தொடர்புபட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை அறிவித்துள்ளது.

தற்போது வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள திட்டமிட்ட குற்றச்செயலில் ஈடுபடும் கஞ சாகர என்பவர், குற்றச் செயல்களை நடத்துவதற்காக ஆர்மி அமில என்பவரை நேரடியாக பயன்படுத்தியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.



# பல தடைகளையும் தாண்டி கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டது

■ எம்.றொசாந்த்

பல தடைகள் மற்றும் இடையூறுகளையும் தாண்டி, யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டது.

தமிழர்களின் பாரம்பரிய விழாக்களில் ஒன்றான கார்த்திகை விளக்கீடான நேற்று முன்தினம் (18) பல்வேறு தடைகளையும் தாண்டி யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் தீபம் ஏற்றி கொண்டாடப்பட்டது.

தொடர்ச்சி P2

### சீன உர நிறுவனத்துக்கான

# தடையுத்தரவு மேலும் நீடிப்பு




சீனாவின் Qingdao Seawin Biotech Group Co. Ltd. நிறுவனத்தின் சேதன பசளைக்கான கட்டணத்தை செலுத்துவதை இடைநிறுத்தி மக்கள் வங்கிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

# மக்கள் அர்ப்பணித்தால் மட்டுமே கொரோனாவை கட்டுப்படுத்தலாம்

கொரோனா தொற்று அதிகரிப்பை கட்டுப்படுத்தும் விடயத்தில் அரசாங்கம் என்ற ரீதியில் எம்மால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளோம் எனத் தெரிவித்து சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, தற்போது நாட்டில் 75 சதவீதமானவர்களுக்கு 2 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன என்றார்.

உலகில் 3 நாடுகளே தடுப்பூசி விடயத்தில் சிறந்த நிலையை அடைந்துள்ளன. அதில் இலங்கையும் ஒன்றாகும். 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர் தடுப்பூசியை செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மக்களின் செயற்பாடுகளும் நடத்தைகளும் கொரோனாவை கட்டுப்படுத்துவதில் இருக்க வேண்டும்.

தொடர்ச்சி P2



### 5 மாவட்டங்களில்

# புதிய வைரஸ்

இலங்கையில் மற்றுமொரு கொவிட் டெல்டா துணை வைரஸ் பரம்பரையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு, மூலக்கூறுகள் பிரிவின் பிரதானி டொக்டர் சந்திம ஜீவந்தர தெரிவிக்கின்றார். தொடர்ச்சி P2



### 8 இலட்சத்துக்கும் அதிகமான

# லிட்ரோ சிலிண்டர்கள் விநியோகம்




8 இலட்சத்துக்கும் அதிகமான சமையல் எரிவாயு சிலிண்டர்கள், இந்த வாரத்துக்குள் சந்தைக்கு விநியோகிக்கபட உள்ளதென லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# ஜெர்சியை கோட்டாவுக்கு பரிசளித்தார் பீபா தலைவர்

### முகக்கவசமாக இலங்கை தேசிய கொடியை அணிந்திருந்தார்

நான்கு நாடுகள் பங்குபற்றலுடன் நடைபெற்ற மஹிந்த ராஜபக்ஷ கிண்ண கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில் சிறப்பு அதிதியாக பங்கேற்பதற்காக வருகைதந்திருந்த சர்வதேச கால்பந்து (FIFA) (பீபா) சம்மேளனத்தின் தலைவர் கிஹானி இன்பென்டினோ,

தொடர்ச்சி P2

# அரசியலமைப்பு மீறப்பட்டுள்ளதாக உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்



அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை இருக்கவில்லையெனக் கூறி, உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் 2 பேரும், 4 இராஜாங்க அமைச்சர்களும் அதிகமாக நியமிக்கப்பட்டுள்ளமையால், தொடர்ச்சி P2



### 2022 பட்ஜெட்டும் பெயிலானது:

# இல்லாதவனிடம் பிடுங்கி கம்பனிக்காரர்களுக்கு வழங்கும்

### குமார் வெல்கம தெரிவிப்பு: ராஜபக்ஷர்கள் மீது கடும் அதிருப்தி

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் “பெயில்” (தோல்வி) அடைந்த திட்டமாகுமெனத் தெரிவித்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம, இல்லாதவனிடம் பிடுங்கி கம்பனிக்காரர்களுக்கு வழங்கும் திட்டமே இதுவாகும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## கார்த்திகை வீரர்களுக்காக முடியுமெனில், மாவீரர்களை ஏன் நினைவுகூரமுடியாது

இவ்வாறு, நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட தடைக்கட்டளையினை முல்லைத்தீவு பொலிஸார், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் இல்லத்திற்கு நேற்று (19) சென்று கையளித்திருந்தனர்.

குறித்த தடைக்கட்டளையினைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் நீதிமன்றத்தை மதிக்கின்றோம், நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகளை மதிக்கின்றோம். எனினும் மாவீரர் நாள் நினைவேந்தல்களை மேற்கொள்ளமுடியாதவாறு இவ்வாறாக வழக்குத்தாக்கல்களை பொலிஸார் மேற்கொள்கின்றார்களோ, அதே ஆர்வத்தினை அவர்கள் ஏனைய விடயங்களில் காணமுடிவதில்லை.

குறிப்பாக மக்கள்விடுதலை முன்னணி (ஜே.வி.பி) கட்சியினர் கார்த்திகை வீரர்களின் ஞாபகார்த்தம் என்னும் பெயரில் யாழ்ப்பாணத்திலே கடந்த 13ஆம் திகதியன்று ஒரு நினைவேந்தலை மேற்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான நினைவேந்தல் நிகழ்வுகள் மேற்கொள்ளப்படமுடியுமெனில், மாவீரர்நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை ஏன்? மேற்கொள்ளமுடியாது ஏன் எனக் கேள்வியெழுப்பினர்.

போரிலே உயிரிழந்த வீரர்களை தமிழ் மக்கள் நினைவுகூரக்கூடிய நாளினை தடைசெய்வதற்காக நீதிமன்றிலே பொலிஸார், வழக்குத்தாக்கல் செய்யமுடியுமெனில், ஜே.வி.பி கட்சியினரின் கார்த்திகை வீரர்களின் ஞாபகார்த்தம் என்னும் நினைவேந்தலுக்கு வழக்குத்தாக்கல் செய்யாதது ஏன் எனக் கேள்வியெழுப்பிய அவர், பொலிஸாரின் இத்தகைய பாரபட்சமான நடவடிக்கையையும் கண்டித்தார்.



## சாதாரண திருப்பலி, பூஜைகளுக்கு எவ்விதமான தடையும் இல்லை

எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை மன்னார் ஆலயங்களில் பூஜை வழிபாடுகளை தடை செய்யுமாறும், திருப்பலிகள் மற்றும் பூஜை வழிபாடுகளில் விடுதலைப் புலிகளின் இறந்த மாவீரர்களின் நினைவேந்தல்கள் இடம்பெற உள்ளதாகக் கூறி மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

அந்த விண்ணப்பங்களே நீதிமன்றத்தினால், நிராகரிக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளடங்களாக சிலாவத்துறை, முருங்கன், இலுப்பைக்கடவை உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் ( மன்னார் நீதிமன்றத்தில் விசேட விண்ணப்பம் ஒன்றை நேற்று (19) செய்திருந்தனர்.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம் பெறும் திருப்பலிகள் மற்றும் ஏனைய ஆலயங்கள் சிலவற்றில் இடம்பெறும் பூஜை வழிபாடுகளை தடை செய்யுமாறும், குறித்த திருப்பலிகள் மற்றும் பூஜை வழிபாடுகளில் விடுதலைப் புலிகளின் இறந்த மாவீரர்களின் நினைவேந்தல்கள் இடம் பெற உள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

பொலிஸாரின் விண்ணபத்திற்கு எதிராக சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் தலைமையிலான சட்டத்தரணிகள் இணைந்து விண்ணப்பம் செய்திருந்தனர்.

குறிப்பாக சுகாதார வழி நடைமுறைகளுக்கு அமைவாகவும், அதனை மீறாத வகையில் தற்போது நாட்டில் கொரோனா தொற்று அதிகமாக காணப்படுகின்றமையினால் சுகாதார வழி முறைகளை மீறாத வகையிலும், ஆலயங்களில் இடம்பெறும் நாளாந்த திருப்பலி,பூஜை வழிபாடுகளை மேற்கொள்ளுவதற்கு தடை விதிக்காத வகையில்,இலங்கை அரசியல் அமைப்பில் காணப்படுகின்ற அடிப்படை உரிமைகளை மீறாத வகையில் அடிப்படை உரிமை சுதந்திரத்தை பாதிக்காத வகையில் சமய வழிபாடுகள் மற்றும் யுத்தத்தின் போது இறந்த உறவுகளை நினைவேந்துகின்ற நடவடிக்கைகளையும் தடை செய்யாத வகையில் கட்டளை ஒன்றை பிறப்பிக்க நீதவானிடம் சட்டத்தரணிகள் விண்ணப்பம் செய்திருந்தனர்.

பொலிஸாரின் விண்ணபத்திற்கு அமைவாக விடுதலைப்புலிகளின் நினைவேந்தல் அல்லது கொடி,சின்னங்களை பயன்படுத்தி எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது என்று நீதவான் கட்டளை பிறப்பித்தார்.

மேலும் ஆலயங்களில் இடம் பெறுகின்ற சாதாரண திருப்பலி மற்றும் பூஜை வழிபாடுகளை மேற்கொள்ள எவ்வித தடையும் இல்லை என்றும், கண்டிப்பாக சுகாதார வழி முறைகளை உரிய முறையில் பின் பற்றி நாளாந்த பூஜை வழிபாடுகளை மேற்கொள்ள மன்னார் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

## தனிமைப்படுத்த திட்டமில்லை

காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்கள் உட்பட குறைந்தது ஐந்து மாவட்டங்களில் புதிய கொவிட் கொத்தணிகள் தோன்றியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, அனுமதி பெறாத நிகழ்வுகளை நடாத்துவதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டுமெனவும் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொதுக் கூட்டங்கள் சில பகுதிகளில் புதிய கொவிட் கொத்தணிகளை கிளஸ்டர்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தன என்று அவர் கூறினார்.

இவ்வாறான ஒன்றுகூடல்கள் தவிர்க்கப்படுமானால் நாட்டை மீண்டும் மூட வேண்டிய நிலை ஏற்படாது எனவும் கலாநிதி ஹேரத் தெரிவித்தார்.

## பல தடைகளையும் தாண்டி கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டது

நேற்று (18) மாலை 6 மணியளவில் பல்கலைக்கழகத்தில் கார்த்திகை விளக்கீட்டினை கொண்டாடுவதற்கு சென்ற மாணவர்களுக்கு பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் உள்நுழைய அனுமதி மறுக்கப்பட்டது.

இந்நிலையில், பல்கலைக்கழகத்தில் ஆன்மீக ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ளவும் தடை விதிப்பதா? என மாணவர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டு பல்கலைக்கழகத்துக்குள் சென்று கார்த்திகை விளக்கீட்டு தீபங்களை ஏற்றியுள்ளனர்.

கடந்த வருடம் கார்த்திகை தீபம் ஏற்றியதற்காக யாழ். பல்கலைக்கழக மாணவன் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 8 இலட்சத்துக்கும் அதிகமான லிட்ரோ சிலிண்டர்கள் விநியோகம்




சமையல் எரிவாயு நிறுவனங்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளமை காரணமாக, மேலதிக தேவைகள் தமது நிறுவனத்தின் மீது பகிர்ந்தமையே எரிவாயு தட்டுப்பாட்டுக்கான காரணமென அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஒரு தொகை சமையல் எரிவாயு தொகையை ஏற்றிய கப்பலொன்று வத்தளை- உஸ்வெடகெய்யாவ தல்தியவத்த பகுதிக்கு நேற்று முன்தினம் வருகைத் தந்துள்ளது. அதனையடுத்து தற்போது சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியாகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

“கடந்த ஒரு வாரத்துக்குள் நாம் 7 இலட்சத்துக்கு அதிகமான சமையல் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகித்துள்ளோம் எனத் தெரிவித்துள்ள லிட்ரோ நிறுவனத்தின் விற்பனை மற்றும் வர்த்தக பணிப்பாளர் ஜனக பத்திரண, அதேப்போல் இந்த வாரம் மீண்டும் 8 இலட்சத்துக்கும் அதிகமான சமையல் எரிவாயுவை சந்தைக்கு விநியோகிக்கவுள்ளோம்“ என்றார்.

“போட்டி மிக்க வர்த்தக சந்தையில் சமையல் எரிவாயு இன்மை உள்ளிட்ட காரணங்களால் எரிவாயு கேள்வியை அதிகரித்துள்ளதாகவும் எமது அன்றாட தேவையை விட 25 சதவீதம் சமையல் எரிவாயுவை சந்தைக்கு விநியோகித்துள்ளோம். அத்துடன் இன்னும் 6 நாள்களுக்குள் சகல விற்பனை முகவர் நிலையங்களுக்கும் சமையல் எரிவாயுக்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” என்றார்.

அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி என்பவற்றின் தலையீட்டுடன் சமையல் எரிவாயு தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், இரண்டு நாள்களுக்கு ஒரு தடவை சமையல் எரிவாயுடனான கப்பல் நாட்டை வந்தடையும் என்றார்.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக, இன்றும் பல இடங்களில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.

## இல்லாதவனிடம் பிடுங்கி கம்பனிக்காரர்களுக்கு வழங்கும்

பலரும் ஜனாதிபதியாக வேண்டுமென மிதக்கின்றனர். அவ்வாறானவர்கள் ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர், இந்த ஜனாதிபதியை விரட்டியடிக்க வேண்டியுள்ளது. இந்த ஜனாதிபதி முறைமை இருக்கும் வரையில் பைத்தியகாரர்களையே உருவாவார்கள் என்றார்.

வரவு- செலவுத்திட்டத்தின் மீதான நேற்றைய (19) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த குமார் வெல்கம எம்.பி, அடுத்துவரும் நபரும் ஒரு பைத்தியக்காரன் ஆனால், அவரும் குடும்பத்தை வைத்து அரசியல் செய்தால் என்ன நடக்கும் என்பதை சகலரும் சிந்தித்துப்பாருங்கள் எனக் கேட்டுக்கொண்டார்.

“2022 பட்ஜெட்டில் சாதாரண மக்கள் குறித்து சிந்திக்கவில்லை. ஆனால் அவர்களுக்கே வறுமை, ஏழ்மை என்னவென்பது அதிகமாக தெரியும். இந்த வரவு- செலவுத் திட்டத்தை அமெரிக்காவில் இருந்து பெஷில் ராஜபக்ஷ உருவாக்கினாரா என தெரியவில்லை. ஆனால்? இந்த அரசாங்கத்திற்கு கிடைத்த 69 இலட்சம் வாக்குகளில் பெரும்பானை வாக்குகள் அப்பாவி கஷ்டப்படும் மக்களின் வாக்குகள் என்பதை பெஷில் ராஜபக்ஷநினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்” எனக் கேட்டுக்கொண்டார்.

இருக்கின்றவரிடம் பெற்று இல்லாதவர்களுக்கு கொடுக்க வேண்டுமே தவிர இல்லாதவனிடம் பிடுங்கி கம்பனிக்காரர்களுக்கு வழங்கும் திட்டமே 2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டாகும். ஆகவே நிதி அமைச்சரின் பட்ஜெட்டும் “பெயில்" (தோல்வி) அடைந்த ஒன்றென கூறவேண்டும். பட்ஜெட் யோசனைகளில் பல தவறுகள் உள்ளன. அதனை பாராளுமன்றத்தில் திருத்த முடியுமென நிதி அமைச்சர் ஒரு கூறியிருக்கின்றார். அப்படியாயின் அவர், ஏன்? பட்ஜெட்டை சமர்ப்பித்தார் என்றும் குமார் வெல்கம வினவினார்.

## அரசியலமைப்பு மீறப்பட்டுள்ளதாக...

அரசியலமைப்பு மீறப்பட்டுள்ளதாக உத்தரவிடக் கோரி பொறியியலாளர் கபில ரேணுக பெரேரா, உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்துள்ளார்.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்திற்கு அமைய, அமைச்சரவை அமைச்சர்கள் 30 பேரும் மற்றும் 40 இராஜாங்க அமைச்சர்களை நியமிக்க முடியும் என வரையறை செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, செயற்படாத ஜனாதிபதி, அரசியலமைப்பினூடாக அமைய செயற்படத் தவறியுள்ளதாக உத்தரவிடக் கோரி சட்டத்தரணி தர்ஷன வேரதுவவினூடாக மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் அரசியலமைப்பை பாதுகாத்து அதனை வலுப்படுத்த வேண்டியதன் பொறுப்பு, ஜனாதிபதியின் பிரதான கடமை எனவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது

அவர் தனது மனுவில், சட்ட மா அதிபர், பிரதமர் தலைமையிலான அமைச்சரவை, இராஜாங்க அமைச்சர்கள், ஜனாதிபதி செயலாளர் பி.பீ ஜயசுந்தர, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல உள்ளிட்ட 82 பேரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிதி அமைச்சரால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், அரசாங்கத்தின் வருடாந்த செலவு 525 பில்லியனை விட அதிகமாக காணப்படுவதாகவும் மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

## ஜெர்சியை கோட்டாவுக்கு பரிசளித்தார் பீபா தலைவர்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் சந்தித்தார்.

இந்த கால்பந்தாட்ட போட்டிகள், கொழும்பு ரேஸ்கோஸ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இறுதிப் போட்டியில் வெற்றியீட்டும் அணிக்கு, பீபா தலைவர் வெற்றிக்கிண்ணத்தையும் 30 ஆயிரம் டொலர் ரொக்கப் பரிசும் வழங்கப்படவுள்ளது. அவற்றை பீபா தலைவர் வழங்கி வைக்கவுள்ளார்.

இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கும் அவருடன் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் உயர் அதிகாரிகள் ஐவரும் வருகைதந்துள்ளனர். அவர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரை, அனுராதபுரத்தில் வைத்து சந்தித்தார்.

இவர்களை சந்தித்தபோது, இலங்கை தேசிய கொடியை அவர், முகக்கவசமாக அணிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யொஹானிக்கு பாராளுமன்றில் செவ்வாயன்று பாராட்டு நிகழ்வு

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் அதனை ஏற்பாடு செய்துள்ளதாக ஒன்றியத்தின் செயலாளரும் பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவர் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட்-19 நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வைத்திய கலாநிதி சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.



சுகாதார வழிகாட்டல்களை முழுமையாக பின்பற்றி இந்நிகழ்வு இடம்பெறவுள்ளதாக குஷானி ரோஹணதீர மேலும் தெரிவித்தார்.

அன்றையதினம் அவர், சபாநாயகர் கலரிக்கும் அழைக்கப்படவுள்ளார். அப்போது, சபாநாயகர் உள்ளிட்டோர் யொஹானிக்கு வாழ்த்துரைகளை வழங்குவர்.

## சீன உர நிறுவனத்துக்கான தடையுத்தரவு மேலும் நீடிப்பு

கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தால் நேற்று(19) தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

லங்கா உர நிறுவனம் மற்றும் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் ஆகியவற்றால் சீனாவின் சேதன பசளை கொடுக்கல்- வாங்கல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு நேற்று (19) மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த மனு, கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தின் நீதிபதிகளான பிரதீப் ஹெட்டியாராச்சி மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு தொடர்பில் சீன நிறுவனத்தின் உள்நாட்டு பிரதிநிதியால் நேற்று (19) எழுத்துமூல ஆட்சேபனை சமர்ப்பிக்கப்பட்டது.

சீன சேதன பசளையில் தீங்கு விளைவிக்கக்கூடிய பக்டீரியா காணப்படுவதாக தேசிய தாவர தடுப்பு காப்பு சேவை நிறுவனம் இரண்டு சந்தர்ப்பங்களில் உறுதி செய்தமையால், அந்த சேதன பசளையை நிராகரிக்க விவசாய அமைச்சு தீர்மானித்தது.

சேதன பசளை கொள்வனவிற்காக விநியோகிக்கப்பட்ட கடன் கடிதத்திற்கான கட்டணத்தை செலுத்துவதற்கு தடை விதிக்குமாறு அரச உர நிறுவனங்கள் இரண்டு, கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தன.

எவ்வாறாயினும், சீனாவின் 20,000 மெட்ரிக் தொன் சேதன பசளையுடன் வருகை தந்த Hippo Spirit கப்பல் தொடர்ந்தும் இலங்கையின் கடற்பரப்பில் நங்கூரமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்கள் அர்ப்பணித்தால்...

மக்களின் அர்ப்பணிப்புகளிலும் இதனைக் கட்டுப்படுத்த முடியும். எம்மால் முடிந்ததை செய்கிறோம். மக்கள் கைகளிலேயே மிகுதி தங்கியுள்ளது. பிரச்சினைகள் உள்ளனவென எமக்கு தெரியும். எனினும், இந்த நிலை நீடித்தால் மீண்டும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படலாம். அப்போது கட்சி, நிறம், இல்லாமல் அனைவருக்கும் பாதிப்பு ஏற்படலாம்.

எதிர்க்கட்சியை ஒடுக்கும் செயற்பாடு எங்கும் முன்னெடுக்கவில்லை. ஆனால், அவர்கள் தமது பொறுப்புகளிலிருந்து விலகியுள்ளனர். அவர்கள் உண்மையில் நாட்டை நேசிப்பவர்கள் அல்லர். அவர்களின் தேவை நாட்டில் கொரோனா தொற்றை பரப்புவதாகும் என்றார்.

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புக்காக பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கான நிதியும் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வாரங்களில் மாணவர்களை இரண்டு குழுக்களாக பிரித்து ஒரு நாள் விட்டு ஒருநாள் பாடசாலைகளுக்கு அழைப்பது தொடர்பில் கலந்துரையாடி வருகிறோம் என்றார்.

## புதிய வைரஸ்

B. 1.617.2.104 என்ற வகை வைரஸ் இனமே அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார் காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்கள் உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களில் இந்த வைஸ் பரம்பரை கண்டறியப்பட்டுள்ளது என சுகாதார தரப்பினர் தெரிவித்திருந்தனர்.






## மஞ்சள் கடவையில் மாணவியின் மரணம்:

# யாரிடம் சொல்லியழ?



சுப்பிரமணியம் பாஸ்கரன்




கடந்த திங்கட் கிழமை (15) கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாகவுள்ள பாதசாரி கடவையில், வீதியைக் கடக்க முயற்சித்த மாணவிகள் மீது, கட்டுப்பாடற்ற வேகத்தில் பயணித்த வாகனங்கள், ஒன்றின் பின் ஒன்றாக மோதியதில் ஏற்பட்ட விபத்தில், மாணவி ஒருவர் உயிரிழந்த சம்பவம், பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி நகரத்தின் மேற்குப்புறத்தில் அமைந்துள்ள பின்தங்கிய ஊற்றுப்புலம் கிராமத்திலிருந்து ஊற்றுப்புலம் பாடசாலையில் க.பொ.த சாதாரண தரம் கல்வி கற்ற மாணவிகள் மூவர், உயர்தரம் கல்விக்காக கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அனுமதி பெறுவதற்காக, பாடசாலைக்கு வருகை தந்த நிலையில், இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. உயர்தர அனுமதி பெறுவதற்காக சென்றிருந்த திருவாசகம் மதுசாளினி என்ற மாணவியே விபத்தில் உயிரிழந்தார்.

> **“சாரதிகளிடம் தண்டங்களை அறவிடுதல், தண்டனைகளை வழங்குவதன் மூலம், வீதி விபத்துகளை கட்டுப்படுத்த முடியாது. மாறாக, பொதுமக்கள், சாரதிகள் விழிப்புணர்வாக நடந்துகொள்வதன் மூலமே வீதி விபத்துகளைக் குறைக்க முடியும்**

உயிரிழந்த மாணவியின் தந்தை தினமும் சைக்கிளில் ஊற்றுப்புலத்திலிருந்து விறகு வெட்டி 20 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று, விற்பனை செய்யும் தொழிலாளியாவார். அவர் மிகவும் வறுமைக்குட்பட்ட நிலையில், தனது மகளைக் கற்பித்து, உயர்தரத்துக்கு அனுப்பிய நிலையில், முதல் நாளே மாணவி உயிரிழந்த சம்பவம், அந்தக் கிராமத்தை மட்டுமல்ல, அனைவரையுமே பெரும் சோகத்திற்கு உட்படுத்தியுள்ளது.

நாளாந்தம் விறகு வெட்டி, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வாழும் குடும்பத்தில் பிறந்த மதுசாளினி, தனது கிராம பாடசாலையில் க. பொ.த (சா/த) முடித்து, அங்கிருந்து உயர் கல்வியைத் தொடர்வதற்காக, கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு வந்த இடத்திலேயே இந்தச் சோக சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான இழப்புகள் தடுக்கப்பட வேண்டும்; வாகனச் சாரதிகள் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும். வாகனச் சாரதிகள் தங்களுடைய வருமானத்தை மனதில் எண்ணிக் கொண்டு, அசட்டைத்தனமான போட்டிகளில் ஈடுபடுகின்றார்கள். குறிப்பாக, டிப்பர் வாகனச் சாரதிகள், கூடுதல் வருமானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக, வேகமாக வாகனத்தை செலுத்துதல், பஸ் சாரதிகள் போட்டி போட்டு பஸ்களை செலுத்துதல் எனப் பல்வேறு காரணங்களால், விபத்துகள் அதிகளவில் பதிவாகியுள்ளன.



மதுசாளினி பக்குவமாக பாதசாரிக்கடவையை கடக்க முற்பட்ட போதும் வாகனச் சாரதிகளின் பொறுப்பற்ற செயல் காரணமாகவே அவருடைய உயிர் காவுகொள்ளப்பட்டுள்ளது என்பதே உண்மை.

வடக்கிற்கும் தெற்கிற்குமான போக்குவரத்து மார்க்கமாக ஏ-9 நெடுஞ்சாலை காணப்படுகின்றது. இதன் மையப் பகுதியிலேயே கிளிநொச்சி நகரம், ‘ஒரு நாடா’ வடிவிலான நகரமாகக் காணப்படுகின்றது. இதனால், அதிகளவான விபத்துகள் கிளிநொச்சி நகரத்தை அண்மித்த பகுதிகளில் இடம்பெறுகின்றன

குறிப்பாக, வடக்குக்கான கட்டுமானப் பொருட்களை, கிளிநொச்சி ஊடாகவே கொண்டு செல்ல வேண்டிய ஒரு நிலைமை காணப்படுவதால், கனரக வாகனங்கள் அதிகரித்த வேகத்தில் பயணிக்கின்றன.

குறிப்பாக, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வருகின்ற வாகனங்களின் சாரதிகள், நீண்ட நேரம் வாகனத்தைச் செலுத்துதல், தூக்கமின்மை என்பனவும் கிளிநொச்சி நகரத்தில் விபத்துகளுக்கு காரணமாக அமைகின்றன.



கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையை பொறுத்தவரை, வசதிக் குறைபாடுகள் கொண்ட வைத்தியசாலையாக இயங்கிவருகின்றது. விபத்துகள் அதிகரிப்பு காரணமாக, நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. மாதாந்தம் 300க்கும் மேற்பட்டோர் விபத்துகளால் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த விபத்து இடம்பெற்ற மறுநாள், மாவட்ட செயலாளர் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதில் பொது மக்கள், சாரதிகள், மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில், பல்வேறு கருத்துகள் பரிமாறப்பட்டதுடன் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் கலந்து கொண்ட கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம் .கே இப்நூ அஸார், கூறுகையில், “சாரதிகள், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வும் உரிய ஒழுங்கும் இருக்கின்ற போதுதான், இவ்வாறான வீதி விபத்துகளைத் தடுக்க முடியும். இவ்வாண்டின் ஜனவரி மாதம் முதல், வீதி விபத்துகளால் 23 வரையான மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இதைவிட, கடந்த ஜனவரி மாதம் முதல் இது வரைக்கும், சுமார் ஒரு கோடியே 36 இலட்சம் ரூபாய் சாரதிகளின் தவறான முறையில் வாகனங்களைச் செலுத்துகை, வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காமை போன்ற பல்வேறு குற்றங்களுக்காக, நீதிமன்றம் ஊடாகவும் தபாலகங்கள் ஊடாகவும் அறவிடப்பட்டுள்ளது. இதேபோன்று, கடந்த ஆண்டில் ஒரு கோடியே 62 இலட்சம் ரூபாய் தண்டமாக அறவிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு சாரதிகளிடம் தண்டங்களை அறவிடுதல், தண்டனைகளை வழங்குவதன் மூலம், வீதி விபத்துகளை கட்டுப்படுத்த முடியாது. மாறாக, பொதுமக்கள், சாரதிகள் விழிப்புணர்வாக நடந்துகொள்ள வேண்டும்” என்றார்.

மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் விழிப்புணர்வு ஊட்டப்பட வேண்டும். அத்துடன் கிளிநொச்சியில் கடமையாற்றுவதற்கு போதியளவு பொலிஸார் இல்லாத நிலை காணப்படுகின்றது. இருக்கின்ற பொலிஸாரை வைத்து இங்கே சட்டம், ஒழுங்கை பாதுகாக்க வேண்டியுள்ளது என்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம் .கே இப்நூ அஸார் மேலும் தெரிவித்தார்.

ஒரு குழந்தை கருவாகி, உருவாகி இறக்கின்ற வரைக்கும் அவ்வுயிரைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு, பொலிஸாரிடம் இருக்கின்றது. அந்தவகையில், பொதுமக்கள் பாதுகாப்பு, வீதி விபத்துகள், கொலை, கொள்ளை, களவு என்பவற்றைத் தடுக்க வேண்டிய கடுமையான உழைப்பும் பொலிஸாரிடம் இருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

ஆகவே, குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும் விபத்துகளைத் தடுப்பதற்கும் விபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்கும் பொதுமக்கள் மட்டத்திலேயே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். வாகனங்களைச் செலுத்துகின்ற ஒவ்வொருவரும் மிக அவதானமாகவும் பொறுப்புணர்வுடனும் வீதி ஒழுங்கு விதிகளை மதிக்க வேண்டும். இவ்வாறு, ஒவ்வெருவரும் பொறுப்புடன் சட்டம் ஒழுங்கைப் பின்பற்றி, பொறுப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

# பட்டிருப்பு பாலத்தின் பரிதாப நிலை

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பெறப்பட்ட விடை









வ.சக்திவேல்
shagthivel@gmail.com



“நான் தினமும் இந்தப் பட்டிருப்பு பாலத்தின் ஊடாகத்தான் ஓட்டோவைச் செலுத்திச் செல்கின்றேன். பல வருடக்கணக்காக இப்பாலத்தின் ஒரு பகுதி மீது, ஆறு பெரல்கள் இட்டு, அதனால் பயணம் செய்ய முடியாத அளவுக்குத் தடை போடப்பட்டுள்ளது. ஆனால், சுமார் ஒரு மாத காலமாக அந்த ஆறு பெரல்களையும் எடுத்து விட்டு, கொங்றீட் இடப்பட்ட கம்பிகள் அவ்விடத்தில் வைத்து, அப்பகுதிக்கு தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பாலத்தின் ஒரு பகுதி மீது, ஏன் இவ்வாறு தடை போட்டுள்ளார்கள்? எதற்காக வைத்துள்ளார்கள் என்பது எனக்குத் தெரியாது? ஆனால், ஒடுங்கிய பாலத்தின் ஒரு பகுதியில் வருடக்கணக்காக போக்குவரத்துச் செய்ய முடியாத அளவிற்கு தடைபோட்டுள்ளதால் என்னைப் போன்று ஓட்டோவைச் செலுத்தி, அன்றாடம் தொழில் செய்பவர்களும் பஸ் கனரக வாகனங்கள் என ஆயிரக்கணக்கான வாகனங்கள் பிரயாணம் செய்வோரும் இப்பாலத்தினூடாகச் செல்லும்போது, பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்” என பட்டிருப்பு பாலத்தினூடாக தினமும் பிரயாணம் செய்யும் ஓட்டோ ஓட்டுநர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்டம், சூரியன் உதிக்கும் கடற்கரைப் பிரதேசத்தை அண்டிய நிலப்பரப்பை ‘எழுவாங்கரை’ எனவும், சூரியன் மறையும் பெருநிலப்பரப்பை ‘படுவாங்கரை’ எனவும் மிக நீண்ட காலமாகவிருந்து பேசப்பட்டு வருவது வழக்கமாகவுள்ளது.

படுவாங்கரைப் பகுதியையும் எழுவாங்கரைப் பகுதியையும் பிரிப்பது மட்டக்களப்பு வாவி ஆகும். நிலத் தொடர்பற்றுக் காணப்படும் இந்த எழுவாங்கரை மற்றும் படுவாங்கரைப் பகுதியின் ஒரு பகுதியை இணைப்பதுவும் மிகப் பிரதானமாகவும் காணப்படுவதுதான் இந்தப் பட்டிருப்பு பாலம் ஆகும்.

குறிப்பாக, காலை வேளையில் அதிகளவு மக்கள் பிரயாணம் செய்யும் போது, வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாகச் சென்றுகொண்டிருக்கும்போது, ஒற்றையடிப் பாதை போன்றுதான் இப்பாலம் அமைந்துள்ளது. அந்நிலையில், அதற்குள் வாகனங்கள் சிக்குண்டு, சிரமப்படும் நிலைமையும் ஏற்பட்டு வருகின்றது. பாடசாலை மாணவர்கள், பொதுமக்களும், மிகுந்த அச்சத்துடனேயேதான் இப்பாலத்தின் ஊடாகப் பயணம் செய்து வருகின்றார்கள்.

எனினும், இப்பாலத்தினூடாக பல அரசியல் பிரமுகர்களும் அதிகாரிகளும் அமைச்சர்களும் தினமும் பிரயாணம் செய்கின்றார்கள். ஆனாலும், ஏன் இந்தப் பாலத்தின் ஒரு பகுதியில் இவ்வாறு எதுவித வாகனங்களோ அல்லது யாரும் கால்நடையாகவோ செல்ல முடியாத அளவுக்குத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்கிறர்கள் இல்லை.

பட்டிருப்பு பாலத்தின் ஒரு பகுதி மீது, ஏன் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது?

> **“பாலத்தின் நிர்மாண வேலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 1,500 மில்லியன் ரூபாய் நிதியை, 2022 ஆம் ஆண்டிலாவது கொண்டுவர வேண்டிய பொறுப்பு, பொறுப்பு வாய்ந்த மக்கள் பிரதிநிதிகளிடத்தில் உள்ளது. அதனை அமல்படுத்தி பாலத்தின் அபிவிருத்தி வேலைகளை துரிதப்படுத்த வேண்டிய தலையாய கடமை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண காரியாலயத்திற்கு உள்ளது**

மக்கள் தெரிவிக்கும் கருத்துகள் தொடர்பிலும் பாலத்துக்குப் பொறுப்பாக அமைந்துள்ள கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேள்விகளை முன்வைத்தேன். அவர்களால் அனுப்பப்பட்டுள்ள தகவலுக்கு அமைய, ‘குறித்த பட்டிருப்பு பாலம் 1970களில் நிருமாணிக்கப்பட்டுள்ளது. இப்பாலம் அமைக்கப்பட்டு 60 வருட காலத்தினுள் மீண்டும் அது புனரமைப்புச் செய்திருக்க வேண்டும். இப்பாலத்தில் இடப்பட்டுள்ள கொங்றீற்றில் ஒரு பகுதியில் பழுதடைந்துள்ளதால், அப்பகுதியின் மேல் போக்குவரத்துச் செய்ய முடியாமல் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பாலம் தற்போது பழுதடைந்துள்ள பகுதி மாத்திரமின்றி முழுமையாக புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இப்பாலத்தின் புரமைப்புக்காக 1,500 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், இப்பாலத்தின் புனரமைப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி கிடைக்காமையால், பாலத்தின் அபிவிருத்தி வேலைகள் தாமதம் அடைந்திருந்தது, இருப்பினும் 2022 இல் இதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதி கிடைக்கப் பெற்றதும் பாலத்தின் அபிவிருத்தி வேலைகள் 2022 ஆரம்பிக்கப்படும்’ என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எந்திரி கே. சிவகுமார் எழுத்து மூலம் தெரிவித்துள்ளார்.

பட்டிருப்பு பாலத்தின் கீழ் பகுதியை உற்றுநோக்கினால், அதில் இடப்பட்டுள்ள கம்பிகள் வளைந்துபோய், துருப்பிடித்துக் காணப்படுன்றன. தினமும் அப்பாலத்தினூடாக மக்கள் பிரதிநிதிகள், இப்பாலத்தை புனரமைப்புச் செய்யவேண்டும் என முயற்சிக்கவில்லையா? தினமும் இப்பாலத்தினூடாகப் பயணிக்கும் மக்கள் படும் அவஸ்தைகளை கண்டும் காணாததுபோல் செயற்படுகின்றார்களா? எனவும் பொதுமக்களும் பிரயாணிகளும் வினா எழுப்புகின்றனர்.

1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர், இலங்கையில் மாறி மாறி வந்த அரசாங்கத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்க் கட்சியிலும் ஆளும் கட்சியிலும் மக்கள் பிரதிநிதிகள் அங்கம் வகித்து வருகின்றனர். இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் முக்கிய போக்குவரத்து மார்க்கமாகவுள்ள பட்டிருப்பு பாலத்தின் அபிவிருத்தி பற்றி ஏன் சிந்திக்கவில்லை எனவும் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இந்நிலையில், குறித்த பாலத்தின் தற்போதை நிலைமை தொடர்பில், தகவல் அறியும் சட்டத்தின் மூலம், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண பணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட தகவலுக்குமைய, பாலம் அமையப் பெற்று 60 வருடங்களுக்குள் மீள் புரனரமைப்பு செய்திருத்தல் வேண்டும் எனத் தெரியவந்தாலும், இப்பாலம் அமையப்பெற்று தற்போது 51 வருடங்கள்தான் ஆகின்றன. எனினும் 60 வருடங்களுக்குள் இப்பாலம் பழுதடைந்துள்ளது. பாலம் பழுதடைந்துள்ளமை குறித்து, அதற்குரிய மீள் நிர்மாணம் தொடர்பில் உரிய மதிப்பீடுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ள போதிலும், இன்னும் அதற்குரிய நிதி கிடைக்காமை மிகுந்த துரதிர்ஷ்டவசமானதே எனத் தெரியவருகின்றது.

“ஏதாவது ஓர் அசம்பாவிதம் இடம்பெற்றால்தான், அவ்விடயம் தொடர்பில் மேலும் இடம்பெறாமலிருக்க முன்னேற்பாடுகள் எடுக்கப்பட்டு வருவது, அரச நிர்வாகச் சக்கரத்திலும், மக்கள் பிரதிகளிடத்திலும் காணப்பட்டு வருகின்றமை வழக்கமாகவுள்ளது. அதுபோல் பாட்டிருப்பு பாலம் இடிந்த விழுந்து, அதனூடாக ஏதாவது ஓர் அசம்பாவிதம் இடம்பெறும் வரைக்கும் அதன் புனர்நிர்மாணம் தொடர்பில் நிர்வாகிகள் காத்திருக்கின்றார்களா”? எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே, பட்டிருப்பு பாலத்தின் நிர்மாண வேலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 1,500 மில்லியன் ரூபாய் நிதியை, எதிர்வருகின்ற 2022 ஆம் ஆண்டிலாவது கொண்டுவந்து சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பு, பொறுப்பு வாய்ந்த மக்கள் பிரதிநிதிகளிடத்தில் உள்ளது. அதனை அமல்படுத்தி பாலத்தின் அபிவிருத்தி வேலைகளை துரிதப்படுத்த வேண்டிய தலையாய கடமை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண காரியாலயத்திற்கு உள்ளது.

எனவே, எது எவ்வாறு அமைந்தாலும் பட்டிருப்பு பாலத்தினூடாக பிரயாணம் செய்யும் மக்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு, பாலத்தின் புனரமைப்பு வேலைகளை துறைசார்ந்தவர்கள் முடுக்கிவிட வேண்டும் என்பதுவே அப்பகுதி பொதுமக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.




### கொழும்புப் பல்கலைக்கழகம்

# வருடாந்த ஆய்வு மாநாடு - 2021

**ஆரம்ப நிகழ்வு – நவம்பர் மாதம் 23ஆம் திகதி**

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த ஆய்வு மாநாடு, பல்கலைக்கழக வளாகத்தில் 2021ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

வருடாந்த ஆய்வு மாநாட்டின் நோக்கமானது, பல்வேறு துறைகளில் நடத்தப்படும் கல்விசார் ஆய்வுகளை ஊக்குவித்தலும் ஆய்வுப் பெறுபேறுகளைப் பொதுமக்களிடம் கொண்டு செல்லலும் ஆகும். வருடாந்த ஆய்வு மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வு, நவம்பர் மாதம் 23ஆம் திகதி காலை 8.30 மணிக்குக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் புதிய கலை அரங்கில், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சந்திரிக்கா விஜேயரத்ன தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் சிறப்பு அதிதியாக, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இவ,ர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக, இந்திய உயர்ஸ்தானிகர் குளோபல் பக்லே கலந்து சிறப்பிக்கவுள்ளார். ஆய்வு மாநாட்டின் பிரதம உரையை பேராசிரியர் மொஹான் முனசிங்க ஆற்றவுள்ளார். இவர் நிலையான இலங்கை 2030 தொலைநோக்கு என்ற ஜனாதிபதி நிபுணர் ஆணைக்குழுவின் தலைவரும் காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவின் முன்னாள் உப தலைவருமாவார்.

> **மாநாட்டின் மையக் கரு பொருளானது 'துறைகளுக்கு இடையிலான அணுகுமுறையின் ஊடாகத் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆய்வு' என்பதாகும்**

உயர்கல்விச் செயற்பாடுகளில் ஆய்வு என்பது இன்றியமையாததொன்றாகும். மேலும், பல்வேறு துறைகளில் நடத்தப்படும் ஆய்வின் தரம் மற்றும் தரத்தை மேம்படுத்துதல், தேசிய அபிவிருத்திக்கான செயல், அர்த்தமுள்ள கல்விப் பங்களிப்பை வழங்குதல் என்பன வருடாந்த ஆய்வு மாநாட்டின் நோக்கங்களாகும். இந்த வருடத்துக்கான ஆய்வு மாநாட்டின் மையக் கருப்பொருளானது 'துறைகளுக்கிடையிலான அணுகுமுறையின் ஊடாகத் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆய்வு' என்பதாகும்.

இந்த வருடத்திற்கான ஆய்வு மாநாடானது, இலங்கைக் கல்வித்துறையில் மனிதநேயம் மற்றும் விஞ்ஞானக் கல்வியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படுகின்றது. கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குத் தமது அளப்பரிய பங்களிப்பை வழங்கிய 42 புத்திஜீவிகள் இவ்விழாவில் கௌரவிக்கப்படுகின்றமை வருடாந்த ஆய்வு மாநாட்டின் குறிப்பிட்டுக் கூறத்தக்க முக்கிய அம்சமாகும்.

பின்வரும் ஆய்வுத் தலைப்புக்களில் 300ற்கும் மேற்பட்ட ஆய்வுகள் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன.

கலைப்பீடம்: 'இலங்கையில் மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞானங்களில் நூறு ஆண்டுகள்: நெருக்கடியான காலத்தில் புத்தாக்கம் மற்றும் தழுவல்'.

விஞ்ஞானபீடம்: 'விஞ்ஞானத்தில் பல்துறை அணுகுமுறைகள்'.

மருத்துவபீடம்: 'கோவிட்-19 மற்றும் தொற்றாநோய்கள்: இணைந்த ஆய்வு மூலம் இருதொற்று நோய்களைத் தடங்காணல்'.

சட்ட பீடம்: 'துறைகளுக்கிடையிலான அணுகுமுறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் சட்ட ஆய்வு'.

> **ஆய்வு மாநாட்டின் நோக்கமானது, பல்வேறு துறைகளில் நடத்தப்படும் கல்விசார் ஆய்வுகளை ஊக்குவித்தலும் ஆய்வுப் பெறுபேறுகளைப் பொதுமக்களிடம் கொண்டு செல்லலும் ஆகும்**

கல்விப்பீடம்: 'கல்வியில் துறைகளுக்கிடையிலான ஆய்வு'.

தாதியர்பீடம்: 'தாதியியலில் புதிய பரிமாணம்: அனைவருக்குமான நிலையான சுகாதாரப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பான வலையை உருவாக்குதல்'. தொழில்நுட்பப்பீடம்: 'துறைகளுக்கிடையிலான ஆய்வில் தொழில்நுட்பத்தின் பங்களிப்பு'.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிப் பாடசாலை: 'வளர்ந்து வரும் பிரதேசங்களில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்கள்'.

சுதேச மருத்துவ நிறுவனம்: 'சுதேச மருத்துவத்தில் ஆய்வுக்கான துறைகளுக்கிடையிலான அணுகுமுறை'.

மனிதவள மேம்பாட்டு நிறுவனம்: 'மனதவள மேம்பாடு மற்றும் முகாமைத்துவத்தில் கோவிட்-19 சுகாதார நெருக்கடியின் தாக்கம்'.

தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞானங்கள் நிறுவனம்: 'கலாசாரப் பாரம்பரியம்: நூலகங்கள், அருட்காட்சியகங்கள் மற்றும் ஆவணக்காப்பகங்கள் மூலம் கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை இணைத்தல்'.

நூலகம்: துறைகளுக்கிடையிலான ஆய்வு வழிகாட்டியாக நூலகம்'

ஸ்ரீபாளி வளாகத்தின் ஆய்வு அமர்வானது நவம்பர் மாதம் 22ஆம் திகதி, 'தற்கால ஊடகமும் நிகழ்த்தும் கலைகளும்: அணுகுமுறைகளும் நடைமுறைகளும்' என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

பின்வரும் பீடங்கள், மற்றும் நிறுவனங்களின் வருடாந்த ஆய்வு மாநாடுகள் ஏற்கெனவே நடத்தப்பட்டுள்ளன.

பட்டப்பின் கற்கைகள் பீடம்: 'உலகளாவிய ஒத்துழைப்பு - பல்கலாசாரத்தை மீள்கற்பனை செய்தல்'.

முகாமைத்துவ மற்றும் நிதியியல்பீடம்: 'வணிக முகாமைத்துவத்தில் மூலோபாய நெகிழ்திறம், மீள்கண்டுபிடிப்பு மற்றும் டிஜிட்டல் இடையூறு'.

கிராமிய விஞ்ஞானங்கள் மற்றும் விவசாய தொழில்நுட்பத்துக்கான நிறுவனம்: 'கிராமிய அபிவிருத்தியை நோக்கிய ஸ்மார்ட் விவசாயத்திற்கான முன்னுரை'.

மருத்துவப் பட்டப்பின் நிறுவனம்: 'கோவிட்-19 சகாப்தத்தில் பட்டப்பின் மருத்துவக் கல்வி' என்பனவாகும்.

---

### பிரசவத்துக்குப் பின்னர்

வைத்தியர் ரம்மியா சிவராஜசுந்தரம்
பயிலுநர், மருத்துவ போசணைப்பிரிவு



# நிறை குறைப்பு

ஒரு தாய் குழந்தையைப் பிரசவித்த பின்னர் உள்ள குறிப்பிட்ட காலப்பகுதி, பிரசவத்துக்குப் பிந்தியகாலம் (Postpartum Period) எனப்படும். இக்காலப்பகுதி நான்காவது மூன்று மாதங்களெனவும் (fourth trimester) கருதப்படும். குழந்தை பிறந்த இக்காலப்பகுதி நாளிலிருந்து, ஆறு தொடக்கம் எட்டு வாரங்களாக கருதப்படுகின்றது. ஏனெனில், கர்ப்பகாலத்தில் உடற்தொழிற்பாடுகளில் ஏற்பட்ட பெரும்பாலான மாற்றங்கள், இக்காலப்பகுதியினுள் பழைய நிலையை அடைந்துவிடும். தற்போது சில பிரதேசங்களில் இக்காலப்பகுதியை பன்னிரெண்டு வாரங்களாவும் கருதப்படுகின்றது.

கர்ப்பகாலத்தில் தாயில் ஏற்படும் உடல்நிறை அதிகரிப்பு, தாய் மற்றும் குழந்தையின் ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமாகும். சாதாரணமாக ஒரு பெண்ணின் கர்ப்பகாலத்தில், ஏழு தொடக்கம் 12 கிலோ கிராம் அளவு நிறை அதிகரிப்பு ஏற்படலாம். இருபது சதவீதமான பெண்களில், குழந்தையைப் பிரசவித்த பின்னர், ஆரம்ப நிறையைவிட ஐந்து கிலோ கிராம் அளவு வரை அதிகரித்துக் காணப்படும். கர்ப்பத்துக்கு முன்னர் நிறை அதிகமாகவுள்ள பெண்களில் இந்த நிறை அதிகரிப்பு மேலும் அதிகமாக வாய்ப்புகள் உள்ளது.

கர்ப்பகாலம் மற்றும் பிரசவத்தின் பின்னர், பெண்களில் ஏற்படும் நிறை அதிகரிப்பை சாதாரணமானதாக ஏற்றுக்கொள்ளும் தன்மை, எமது சமூகத்தில் காணப்படுகின்றது. ஆனால், இது மிகவும் தவறான சிந்தனையாகும்.

ஏனெனில், ஒருவரில் அதிகரித்த நிறை தொடர்ந்து காணப்படுமாயின் சலரோகம், உயர்குருதியமுக்கம், மாரடைப்பு மற்றும் சிலவகையான புற்றுநோய்கள் (மார்பகப் புற்றுநோய், குடல் புற்றுநோய்) போன்ற தொற்றாநோய்கள் ஏற்படும் வாய்ப்பை அதிகரிக்கும்.

பிரசவத்தின் பின்னரான நிறைகுறைப்பு, தாய்க்கு மட்டுமல்ல குழந்தைக்கும் நன்மை பயக்கும். ஏனெனில், ஒரு பெண் அடுத்த கர்ப்ப காலத்தில் நுழையும் போது, அதிக நிறையுடன் காணப்படுவாராயின் அது தாய் மற்றும் குழந்தைக்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும்.

பிரசவத்தின் பின்னர் நிறையை குறைக்கும் வழிமுறைகள்

ஒரு தாய் குழந்தையை பிரசவித்த பின்னர், உடனடியாக ஐந்து தொடக்கம் ஆறு கிலோ கிராம் அளவு நிறைகுறைவு ஏற்படும். இந்த நிறைகுறைவு, தாயிலிருந்து குழந்தை நஞ்சுக்கொடி மற்றும் சிறிதளவு இரத்தம் வெளியேறுவதால் ஏற்படுகின்றது.

குழந்தையை பிரசவித்த தாய்மார்களில் அதிகளவில் சிறுநீர் வெளியேறுவதை (Brisk diuresis) அவதானிக்க முடியும். இது ஆறு மாதங்கள் வரையில் காணப்படலாம். இதனால், தாயில் மேலும் இரண்டு தொடக்கம் மூன்று கிலோ கிராம் அளவு நிறை குறைவு ஏற்படும்.

தாய்ப்பாலூட்டலில் குழந்தை மற்றும் தாய்க்கு பல்வேறு வகைகளில் நன்மைகள் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒரு குழந்தைக்கு ஆகக் குறைந்தது ஆறு மாதங்கள் வரை தாய்ப்பாலூட்டுமாறு உலக சுகாதார நிறுவனம் மற்றும் இலங்கை குடும்ப சுகாதார பணியகம் என்பன பரிந்துரை செய்கின்றன.

தாய்மார்கள், குழந்தைக்கு தாய்ப்பாலூட்டும்போது, உடலில் கொழுப்பு சேமிக்கப்படும் தன்மை மற்றும் கொழுப்பு இழையங்களின் தொழிற்பாடுகளில் ஏற்படும் மாற்றங்கள் பிரசவத்தின்போது, அதிகரித்த உடல்நிறை குறைவடைய ஏதுவாக அமையும்.

பிரசவத்தின் பின்னர், தாய்ப்பாலூட்டாத தாய்மார்களைவிட, தாய்ப்பாலூட்டும் தாய்மார்களில் அதிகளவான நிறைகுறைவு ஏற்படும் என்பதை உலகில் பல பாகங்களில் செய்யப்பட்ட ஆய்வு முடிவுகள் நிரூபிக்கின்றன.

பிரசவத்தின் பின்னர் மருத்துவ ஆலோசனைப்படி உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி என்பவற்றை மேற்கொள்வதால் தாய்ப்பால் சுரக்கும் அளவிலோ குழந்தையின் ஆரோக்கியத்துக்கோ எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்பதையும் ஆய்வு முடிவுகள் நிரூபிக்கின்றன.

தாய்ப்பாலூட்டலைத் தவிர்த்து, பிரசவத்தின் பின்னர் நிறை குறைதல் சாதாரணமாக ஏனையவர்களில் நிறைகுறைதலைப் போன்றதாகும். உணவுக்கட்டப்பாடு, உடற்பயிற்சி ஆகியவற்றை தனித்தனியே மேற்கொள்வதைவிட, இரண்டு நடவடிக்கைகளையும் ஒன்றாகச் செய்யும்போது நிறை குறைவை இலகுவில் அடையமுடியும்.

துரித உணவுகளைத் தவிர்த்தல், மரக்கறிவகை உணவை உட்கொள்ளல், மற்றும் weight watchers diet, Mediterranean diet உணவுப் பழக்கங்களை பின்பற்றல் போன்றவை நிறைகுறைவை இலகுவாக அடைய வழிவகுக்குமென ஆய்வுமுடிவுகள் நிரூபிக்கின்றன.

கர்ப்பத்துக்கு முந்தயகாலம், கர்ப்பகாலம், பிரசவத்துக்குப் பின்னரான காலத்தில் ஆரோக்கியமான உடல்நிறையைப்பேணுவதற்குப் பின்வரும் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

அடிப்படை உணவாக, மாப்பொருள் உணவை உட்கொள்ளல் அத்துடன் தீட்டாத தானியங்களை அதிகளவு உபயோகித்தல்.

நார்ச்சத்து உள்ள உணவுகளை அதிகளவு உட்கொள்ளல்.

நாளொன்றுக்கு குறைந்தது ஐந்து பங்குகள் பழங்கள், மரக்கறி வகைகளை உட்கொள்ளல்.

துரித உணவுகள், அதிகளவு சீனி, கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை மிகக் குறைந்தளவில் உட்கொள்ளல்.


ஒவ்வொரு வேளை உணவையும் தவிர்க்காது உட்கொள்வதுடன் உட்கொள்ளும் உணவின் அளவில் (portion size) கவனம் செலுத்தவேண்டும்.

> **கர்ப்பத்துக்கு முந்தயகாலம், கர்ப்பகாலம், பிரசவத்துக்குப் பின்னரான காலத்தில் ஆரோக்கியமான உடல்நிறையைப்பேணுவதற்குப் பின்வரும் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன**

உட்கார்ந்து இருக்கும் நேரத்தை குறைத்து வேகமாக நடத்தல், சைக்கிள் ஓடுதல், நீச்சல் போன்ற உடற்பயிற்சிகளில் ஈடுபடுதல்.

ஆரோக்கியமான நிறைகுறைவை அடைவதற்கு வாரமொன்க்கு 150 நிமிடங்கள் மிதமான உடற்பயிற்சி செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதனை நாளொன்றுக்கு 30 நிமிடங்களாக வாரத்தின் ஐந்து நாள்களில் செய்யமுடியும். இதனை மேலும் 10 நிமிடங்களாகப் பிரித்து, நாளொன்றுக்கு மூன்று தடவைகள் செய்துகொள்ள முடியும். வேகமாக நடத்தல், சமமான தளத்தில் சைக்கிள் ஓடுதல் போன்ற உடற்பயிற்சிகளை செய்வதன் மூலம், எவ்விதமான பிரச்சினைகளும் இல்லாமல் சாதாரணமாக சுகப்பிரசவம் மூலம் குழந்தையை பெற்றெடுத்த தாயொருவர் குழந்தை பிறந்த சிலநாள்களின் பின்னர், உடற்பயிற்சி செய்ய ஆரம்பிக்கலாம். சிசேரியன் முறை மூலம் குழந்தை பெற்றெடுத்த தாயெனின், மருத்துவ ஆலோசனை பெற்றபின்னர் உடற்பயிற்சியை ஆரம்பித்தல் சிறந்ததாகும்.





இடை விலகும் ஒரு சமூகத்தை

# தடுப்பது யார்?

'கல்வி ஆபரணம் அல்ல; ஆடை'



ரமேஷ் ரெஜினா





எழில் கொஞ்சும் மலையகம் என புகழாரம் பெற்ற மலையக பிரதேசங்களில் அழகுக்கும் வளத்திற்கும் குறை ஏதும் இல்லை. எனினும் எம் தலைமுறையினரின் எதிர்காலம் கேள்விக் குறியுடனே நகர்ந்து வருகின்றது. தேயிலை மலைகளால் சூழப்பட்ட மண்ணில் 50 சதவீதமானோர் கற்றுத்தேர்ந்த இருக்கும் நிலையில், கல்வி அறிவைப் பெறாதவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இதில், மாணவர்களின் கல்வி இடைவிலகலானது மலையகத்தில், பல காலமாக பேசப்பட்டு வரும் கருப் பொருளாக அமைகின்றது.

'இளமையில் கல்வி சிலை மேல் எழுத்து' என்ற குறல் நாம் யாவரும் அறிந்ததே. மாணவர்களின் நுண்மதி மற்றும் திறன்களின் வளர்ச்சியில் கல்வி முக்கிய பங்காற்றும். வாழ்வை கல்வியின் மூலம் வளமாக்கிக் கொள்ள வேண்டும். அதுவும் இளமை காலத்தில் கிடைக்க வேண்டும் என்பதனை உளவியலும் பறைசாற்றும்.

கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ளும் பிரதான அமையம் பாடசாலையாகும். வளர்ந்துவரும் பூகோளமயமாக்கலுக்கு ஏற்ப இலங்கையின் கல்வி விருத்தியும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. இதற்கு தாக்குப்பிடிக்கும் திறன் இன்மையால் நுவரெலியா, பதுளை மாவட்டங்கள் உட்பட்ட மலையக பிரதேசங்களில் மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்த வண்ணமே உள்ளது.

நுவரெலியா எலிபன்ட் தோட்டத்தின் மூன்று பிரிவுகளில் 66 மாணவர்கள், கந்தப்பளை பிரதேசத்தில் 8 தோட்டங்களில் 96 மாணவர்களும், மொத்தம் 162 மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடை விலகி இருப்பதாய் செய்திகள் வெளியாகின.

இவ்வாறு மாணவர்களின் கல்வி இடைவிலகலில் பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்தி வருகின்றன. குடும்ப சூழ்நிலை, மாணவர்களின் வறுமைநிலை, பாதணிகள், புத்தகப் பைகளை கொள்வனவு செய்ய முடியாமை, பெற்றோரின் அசமந்தப் போக்கு, போசாக்கு பிரச்சினை, வேலைவாய்ப்பினை நாடிச் செல்லல், போதைப் பொருள் பாவனை, பாலியல் துஷ்பிரயோகம் இவ்வாறு அடிக்கிக்கொண்டே போகலாம்.

இலங்கையை பொறுத்தமட்டில் கொழும்பு மற்றும் அதனை அண்டிய நகர் புறங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டு வரும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே செல்கிறது. பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்களில் அதிகமானவர்கள், சிறுவர்கள் தொழிலாளர்களாகப் உள்ளதாக சிறுவர் செயற்பாட்டு மையம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 25 சதவீதமானவர்கள் 12 தொடக்கம் 14 வயதுக்குட்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொரோன வைரஸால், கல்வித்துறை பெருமளவில் தாக்கத்தை எதிர்கொண்டு வருகின்றது. இது மலையக மாணவர்களின் கல்வித் துறையிலும் தனது பாதிப்பை ஏற்படுத்த தவறவில்லை. இக்கால விடுமுறை மாணவர்களின் கல்வியில் மந்தமான சூழலை ஏற்படுத்தியதோடு இணையவழி கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத வறுமைநிலை, வலையமைப்பு பிரச்சினைகள், இளம் வயது காதல் மற்றும் திருமணங்கள், அதிகரித்த தொலைபேசி கட்டணம், தொலைக்காட்சி மீதான மோகம் உள்ளிட்டவற்றை மாணவர்களின் இடைவிலகலை இன்னுமின்னும் தூண்டுவதாய் அமைந்திருந்தன.

கல்வி பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிடாத பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தி தொழிலுக்கு அமர்த்தும் நிலையும் மென்மேலும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. சாலையோர வியாபாரிகளாகவும், கூலித் தொழிலாளர்களாகவும் மாறும் சிறுவர்கள், நாளைய இளைய தலை முறையினரை என்பதே கவலைக்குரிய விடயமாகும். இதன் விளைவுகள் பாரதூர நிலைமைகளை ஏற்படுத்தியது மட்டுமன்றி, உயிர் பலிகளை ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் இலங்கை நாட்டை திணற செய்த ஹிஷாலினியின் சம்பவம் இதற்கு விதிவிலக்கல்ல!

இவ்வாறு மலையக மாணவர்களின் இடைவிலகலானது சமூகவியல் அறிஞர்கள் மற்றும் கல்வி கற்றகுழாமினரால் கவனம் செலுத்தும் பகுதியாக உள்ளது. இதனை தடுக்கும் முகமாக, பல தரப்பினராலும் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கைகள் மேலும் வலுப் பெறவும் துரிதப்படுத்தவும் வேண்டிய தேவை எழுந்துள்ளது.

அவ்வாறான நடவடிக்கைகளில் சிலவற்றை பின்வருமாறு பட்டியலிடலாம். மலையகத்தில் அதிகரித்து வரும் மது பாவனை கட்டுப்படுத்துவதன் மூலம் பெற்றோர் மது பாவனைக்கு செலவழிக்கும் பணத்தை கல்வி நடவடிக்கைகளுக்கு வழங்குதல். தேயிலை தோட்டங்களை மட்டுமே நம்பியிருக்கும் பெற்றோர்களிடம் கல்வியின் அவசியம் உணர்த்தப்படல் வேண்டும். மற்றும் நான்கு எழுத்துக்களை தெரிந்து வைப்பது மட்டுமே கல்வி அல்ல. நமது சமுதாய வளர்ச்சி கல்வி என்ற நிலை தோற்றம் பெற வேண்டும். கல்வி முறையில் கட்டாய கல்வி தேவை வலியுறுத்தப்பட வேண்டும். 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை தடுப்பதற்கான சட்டங்கள் கடுமையாக்கப்படவேண்டும். சட்டங்களை மீறும் சகல தரப்பினருக்கும் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படவேண்டும்.

மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடை விலகும் போது அதற்கு பொறுப்பானவர்கள் சகலருக்கு எதிராகவும் விசாரணைகளை விரிவுபடுத்தல், ஆசிரியர்கள், மாணவர்களின் கல்வி நலன்களில் காண்பிக்கும் அக்கறை அதிகரிக்கப்படவேண்டும், ஆலோசனை சபைகள், மன்றங்கள் இது தொடர்பில் விழிப்புணர்வுடன் செயல்படல், கிராமசேவகர் மற்றும் பிரதேச சபை என்பன தம் பிரதேச மாணவர்களை கல்வி பற்றிய விழிப்புணர்வுடனும் மற்றும் கண்காணிப்புடனும் செயற்பட வேண்டும். இவைப்போன்ற பல வழிமுறைகள் முன்வைக்கலாம். எனினும், இதனை நடைமுறைப்படுத்தும் விதத்தில் தான் வெற்றியின் அளவு உள்ளது.

கற்றவர்களின் நல் ஆதரவுடன் மனநல ஆலோசனை வழங்குதல், கிராமங்கள், தோட்டங்கள் தோறும் செயற்திட்டங்களை மேற்கொள்ளல் மூலம் இடை விலகும் ஒரு சமூகத்தை தடுத்து நிறுத்த முடியும்.

மாணவர்களின் இடைவிலகல் குறைப்பதற்கேற்ற வழிமுறைகளை இனங்கண்டு மலையகப் பிரதேசங்களில் நடைமுறைப் படுத்துவதன் மூலம் திறன்மிகு கல்விகற்ற நாளைய தலைமுறையினரை உருவாக்கலாம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இதற்கு ஆசிரியர்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். யதார்த்த வாழ்வியலுடன் கூடிய கற்பித்தல் முறை மலையக மண்ணிற்கு தற்சமயம் அவசியமாகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டால் மனிதவளம் மட்டுமன்றி நாட்டின் வளமும் செழிக்கும்.

'இளமை காலத்தே கல்வியைப் புறக்கணித்தவன் எதிர்கால வாழ்வை இழந்தவன் ஆகின்றான்', 'பெற்று தாய் உன்னை கைவிட்டாலும் கற்ற கல்வி உன்னைக் கைவிடாது', 'கல்வி ஆபரணம் அல்ல; ஆடை' போன்ற பொன்மொழிகள் எமக்கு கல்வியின் அவசியத்தை புகட்டிக் கொண்டிருக்கின்றன.

மலையக மாணவர்களின் கல்வியில் சிகரமாய் உயர கரம் கோர்த்து ஒன்றிணைவோம். முதற் பாகமாய் மாணவர்கள் கல்வியில் இடைவிலகலை நிவர்த்தி செய்வோம் . "பளிங்கு கற்கள் அழகிய சிற்பம் ஆவது போல், கல்வியால் ஆன்மா சிறப்படையட்டும்'.

---

UNFPA Ensuring rights and choices for all since 1969 | ICPD25 International Conference on Population and Development | DECADE OF ACTION

பாலியல் மற்றும் பாலினம்சார் வன்முறையில் தப்பிப் பிழைத்தவர்களுக்கான

# இணையவழி பயிற்சி கற்கைநெறிகள் ஆரம்பம்

**இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியமானது, கொழும்பு, ஆய்வு மற்றும் உளவியலுக்கான நிறுவனத்துடன் (CIRP) இணைந்து, பாதுகாப்பான புகலிடங்களில் தங்கியிருந்து, ஆதரவு சேவைகளைப் பெற்று வரும் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையில் தப்பிப் பிழைத்தவரக்ளுக்கான தொடர்ச்சியான விரிவான இணையவழி பயிற்சிக் கற்கைநெறிகளை சமீபத்தில் அறிமுகப்படுத்தியது.**

இந்தப் பாதுகாப்பான புகலிடங்களை இலங்கை பெண்கள் பணியகம் மற்றும் சில சிவில் சமூக அமைப்புகள் இணைந்து ஆதரிக்கின்றன. மேலும் இந்த புகலிடங்கள் இலங்கையின் பல பாகங்களிலும் அமைந்துள்ளன.

தொற்றுநோய்க்கு மத்தியில், பொது முடக்கம், பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு சமூகத்தில் காணப்படும் சமத்துவமின்மையை மேலும் அதிகப்படுத்தியுள்ளது, இதன் விளைவாக பாதுகாப்பான புகலிடங்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது.

> **பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையில் இருந்து தப்பியவர்களுக்கு, தங்குமிடங்கள் தற்காலிக புகலிடங்களாக செயல்படுவதோடு, பெண்களை மீள வலுவடைய தேவையான உடல், உளவியல் மற்றும் சட்ட சேவைகளையும் வழங்குகின்றன**

கொவிட்-19க்கு முன்பே, உலகளவில் மிகவும் பொதுவான மனித உரிமை மீறல்களில் ஒன்றாக பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை இருந்து வந்தது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பெண்கள் நல்வாழ்வு கணக்கெடுப்பின்படி, இலங்கையில் இதுவரை துணையுடன் வாழ்ந்த பெண்களில் ஐவரில் ஒருவர் (20.4%) தங்கள் வாழ்நாளில் நெருங்கிய வாழ்க்கைத் துணையால் உடல் மற்றும் அல்லது பாலியல் வன்முறையை அனுபவித்திருக்கிறார்கள் (2019).

பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையில் இருந்து தப்பியவர்களுக்கு, தங்குமிடங்கள் தற்காலிக புகலிடங்களாக செயல்படுவதோடு, பெண்கள் மற்றும் இளம்பெண்களை மீள வலுவடைய தேவையான உடல், உளவியல் மற்றும் சட்ட சேவைகளையும் வழங்குகின்றன.

இலங்கையில் புகலிடங்கள் மத்தியில் நடத்தப்பட்ட தொழில் பயிற்சி தேவைகள் குறித்த விரைவான மதிப்பீடு, புகலிடம் தற்காலிகமாக செயல்பட்டாலும், தப்பிப்பிழைத்தவரக்ளில் பெரும்பாலானோர் சமூகத்துடன் மீண்டும் ஒன்றிணைவதற்கு முழுமையாகத் தயாராகும் வரை நீண்ட காலம் தங்கியிருப்பதைக் குறிப்பிடுகிறது. புகலிடங்களை விட்டு வெளியேறியவுடன் ஒரு நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்குவதில் அவர்களுக்கு நன்மை பயக்கும், திறன் மேம்பாட்டு பயிற்சியை புகலிடங்களில் வாழும்; 97சதவீதமானோர் விரும்புவதாகவும் மதிப்பீடு கண்டறிந்துள்ளது.

> **தொழிலைக் கட்டியெழுப்பல், பதிவுகளைப் பேணல், நிதி முகாமைத்துவம், தொழில் செயற்பாடுகளுக்காக மென்பொருள், ஏனைய அம்சங்களின் பயன்பாடு போன்ற அடிப்படைகளை உள்ளடக்கி இந்த இணையக் கற்கைகளின் உள்ளடக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன**

இந்நிலையில் இந்த தேவையை உணர்ந்த ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம், ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நித்தியத்தினால் செயற்படுத்தப்படும் வாக்குறுதிகள் (PROMISES) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கொழும்பு, ஆய்வு மற்றும் உளவியலுக்கான நிறுவனத்தின் மூலம், இணையவழி திறன் அபிவிருத்தி கற்கைநெறிகளை உருவாக்க ஏற்பாடுகள் செய்தது.

"பெண்கள் மற்றும் சிறுமியருக்கு எதிரான வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தல், ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தில் முக்கிய புள்ளிகளில் ஒன்றாக காணப்படுகின்றது. முக்கியமாக பெண்கள் அல்லது சிறுமி ஒருவருக்கு எதிரான எந்த வடிவத்திலான வன்முறையும் குறித்த நபரில் மாத்திரமன்றி ஒட்டுமொத்த குடும்பத்திலும் சமூகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த கூட்டு முயற்சியின் மூலம் வழங்கப்படும் பயிற்சி நெறிகள், பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையிலிருந்து தப்பிப் பிழைத்த பெண்கள் மற்றும் சிறுமியர் தம்வாழ்வை மீளக்கட்டியெழுப்பவும் மற்றும் மீள வலுப்பெறுவதற்குமான வாய்ப்பை வழங்கும் என்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்" என இலங்கை பிரதிநிதி நவச்சா சுரேன் தெரிவித்தார்.

இந்த பயிற்சி கற்கை நெறிக்கான தேவையை அங்கிகரித்த, பெண்கள் பணியகத்தின் பணிப்பாளர் திருமதி சம்பா உபசேன, "பெண்கள் பணியத்தின் கீழ் இயங்கும் பாதுகாப்பான புகலிடங்கள், எல்லா நேரங்களிலும் பெண்கள் மீள வலுப்பெற வேண்டும் என்பது மட்டுமன்றி அவர்களின் வாழ்வை பொருளாதார ரீதியாக மற்றும் சமூக ரீதியாக மீள கட்டியெழுப்பவும் வேண்டுமென்பதற்காகவும் தம் பணிகளை முன்னெடுக்கின்றன. பாலியல் மற்றும் பாலின வன்முறைகளில் இருந்து தப்பிப்பிழைத்த பெண்களுக்கு தேவையான அறிவு மற்றும் ஆற்றல்களை இந்த கற்கைநெறிகள் வழங்கும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்" என குறிப்பிட்டார்.

தொழில் ஒன்றைக் கட்டியெழுப்பல், பதிவுகளைப் பேணல் மற்றும் நிதி முகாமைத்துவம், தொழில் செயற்பாடுகளுக்காக மென்பொருள் மற்றும் ஏனைய அம்சங்களின் பயன்பாடு போன்ற அடிப்படைகளை உள்ளடக்கிய வகையில் இந்த சான்றளிக்கப்பட்ட இணையக் கற்கைகளின் உள்ளடக்கங்கள் தேவைகளுக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளன. புகலிடங்களில் உள்ள தப்பிப் பிழைத்தவர்களுக்கு அத்தியாவசிய தொழில் திறன்கள் மற்றும் வாழ்க்கைத் தொழிலை ஆரம்பிப்பதற்கும், நிதி ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் சுயாதீனமாக இருப்பதற்கும் தேவையான திறன்களை கற்பிக்கும் வகையில் இந்த கற்கைநெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து கருத்து தெரிவித்த கொழும்பு, ஆய்வு மற்றும் உளவியலுக்கான நிறுவனத்தின்செயல்திட்ட பிரதானி சதுர கொட்டகம, "ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்துடனான இந்தச் செயல்திட்டத்தில் பணியாற்றும் சந்தர்ப்பத்தினை குறித்து கொழும்பு, ஆய்வு மற்றும் உளவியலுக்கான நிறுவனம் பெருமகிழ்ச்சியடைகின்றது. பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையிலிருந்து தப்பிப் பிழைத்தவரக்ளுக்கு ஆதரவளிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் மற்றும் ஜப்பானிய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு எமது பாராட்டுகள். உளவளத்துணை மற்றும் உளவியல் ரீதியில் இயலுமையைக் கட்டியெழுப்புவதே கொழும்பு, ஆய்வு மற்றும் உளவியலுக்கான நிறுவனத்தின் பிரதான இலக்காகும். ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்துடன் இணைந்து பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையிலிருந்து தப்பிப்பிழைத்தவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு பங்களிக்கக் கிடைத்த இந்த சந்தர்ப்பத்தை எண்ணி நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்" எனத் தெரிவித்தார்.

# புண்ணாகியிருக்கும் மனங்களை கீறிக்கீறி பார்க்கக்கூடாது

ஒரு சமூகத்தின் மீதான சந்தேகப் பார்வை களையப்படாதவிடத்து, அச்சமூகத்தை சதாகாலமும் எதிரியாகவே பார்க்கவேண்டிய நிலைமை ஏற்படும். இது, பல்லினங்கள் வாழும் ஒரு நாட்டில், வேண்டாத வெறுப்புகளையும் இனங்களுக்கு இடையிலான விரிசல்களையும் ஏற்படுத்தும்.

புண்பட்ட மனங்களை, யுத்தகாலம் யுத்தத்துக்குப் பின்னரான காலமென இரண்டாக வகைப்படுத்தி பார்க்கலாம், யுத்தகாலத்தில் நாடளாவிய ரீதியில் பேரச்சம் ஏற்பட்டிருந்தது. வீட்டிலிருந்து வெளியேறிய ஒருவர், வீட்டுக்குத் திரும்புவதே சந்தேகமாக இருந்தது.

யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர், தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் அவ்வாறான அச்ச நிலைமையொன்று, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெறும் வரையிலும் இருக்கவில்லை; பின்னர் களையப்பட்டுள்ளது.

ஆனால், தென்னிலங்கைக்கு வெளியே, குறிப்பாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களில், இந்த அச்சம் இன்னுமின்னுமே இருக்கிறது. அல்லது வேண்டுமென்றே அச்சத்துக்கு உள்ளாக்கப்படுவதை நினைக்கையில் வேதனையளிக்கிறது.

தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக, அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்திய ஒரேயொரு குழு, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மட்டுமேயாகுமென நினைக்கக்கூடாது. தென்னிலங்கையைப் பொறுத்தமட்டில், ஜே.வி.பி யுகமும் இருந்தது.

அவ்வமைப்பில் அங்கம் வகித்தவர்கள் ஆயுதங்களைக் கைவிட்டு, ஜனநாயக நீரோட்டத்தில் இணைத்து, மக்கள் பிரதிநிதிகளாகவும் இருக்கிறனர். அவ்வமைப்பில் உயிர்நீத்தவர்கள் 'கார்த்திகை வீரர்கள்' என நினைவுகூரப்படுகின்றனர். அதற்கு எவ்விதமான கட்டுப்பாடுகளையோ, இடையூறுகளையோ அரசாங்கம் ஏற்படுத்துவதில்லை.

ஆனால், தங்களுடைய குடும்ப உறுப்பினர்களை நினைவுகூர்வதற்கான மாதத்தில் மட்டும், வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவிக்க வேண்டியவர்களாக இன்னுமே இருக்கின்றனர்.

பயங்கரவாதிகளை நினைகூர்வதன் ஊடாக, அவ்வமைப்பின் சிந்தனை மீண்டும் விதைக்கப்படுகின்றது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால், உறவினர்களை நினைவுகூர்வதற்கு வேண்டுமென்றே தடைகளை ஏற்படுத்துவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

நல்லநேரம், கார்த்திகை விளக்கீடு நேற்று (18) குறிப்பிடப்பட்டிருந்தது. அதனால், தமிழர்கள் அதனை அனுஷ்டிக்கக்கூடியதாய் இருந்தது. இதுவே, மாவீரர் வாரத்துக்குள் வந்திருக்குமாயின், ஒட்டுமொத்த தமிழர்களும் கார்த்திகை விளக்கீட்டில் விளக்குகள் ஏற்றமுடியாத நெருக்கடியான நிலைமைக்கு முகங்கொடுத்திருக்கக்கூடும். அவ்வாறான நெருக்கடிகளை கடந்தகாலங்களில் கண்ணுற்றோம்.

யுத்தத்துக்குப் பின்னர், வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்கள், ஒவ்வொரு கார்த்திகை மாதங்களிலும் கண்காணிக்கப்படுகின்றனர். வீடு,வீடாகச் செல்கின்ற படையினரும் புலனாய்வுத் துறையினரும் தரவுகளைத் திரட்டிவருகின்றனர். இது புண்பட்டிருக்கும் மனங்களை வேண்டுமென்றே கீறும் செயற்பாடாகும்.

காயங்கள் ஆறாமல், புண்பட்டிக்கும் நிலையில், அம்மனங்களை மீண்டும், மீண்டும் வேண்டுமென்றே கீறிபார்க்கும் செயல்கள் கைவிடப்படவேண்டும். இல்லையேல், இனங்களுக்கு இடையிலான விரிசல்கள் இன்னுமின்னும் அகலமாய்விடும். அத்துடன், புண்களை ஆற்றுவதற்கான மருந்துகள் கிடைக்காமலேபோய்விடும்.


தமிழ் Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

பசி சகல உயிரினங்களுக்கும் பொதுவான தேவை. பசி இல்லாது விட்டால், மனிதர்கள் உழைப்பதில் கவனம் செலுத்தமாட்டார்கள். உலகத்தில் வாழும் உயிரினங்களும் இயக்கமின்றி இருந்து விடும்.

உணவு உண்ணாவிட்டால், உடல் சக்தி இழந்து, வாடிவதங்கிவிடும். காற்று, வெயில் போன்றவற்றிலும் பயன் இருக்காது; உலகமே ஸ்தம்பித்து வெறும் சூனியப் பிரதேசமாகி விடும். உணவின்றி எந்த உயிரினங்களும் தோன்றாது விடும்.

எத்தனை நாள்களுக்கு எங்களால் சாப்பிடாமல் இருக்கமுடியும்? தாவரங்கள் கூட, தங்களுக்கு உரிய உணவை இலைகள் மூலம் (பச்சையம்) பெற்றுக்கொள்கின்றன. இது இயற்கையின் நியதி.

காற்று, நீர், வெப்பம், ஆகாயம், நிலம் ஆகிய பஞ்சபூதங்கள் ஊடாகவே சகல உயிர்களும் உயிர்த்து எழுகின்றன. உலகத்தில் வாழும் ஒவ்வோர் உயிரினத்துக்கும் உணவைத் தருவதில் இருந்து, சகலதும் ஐம்பெரும் பஞ்சபூதங்களாலேயே நடைபெறுகின்றன.

ஏனெனில், உணவைத் தேடி அலைந்தும், அன்றாட உணவு இன்றி வாழும் உயிர்கள் உலகினில் பலகோடி. இவைகளுக்கும் இரங்குக!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# நினைவேந்தல்களை மறுத்தல்

**லக்ஸ்மன்**

தமிழர்களின் ஆண்டாண்டு காலமான நினைவுகளை அழித்துவிடுதலுக்கான அடக்குதல்கள் நடைபெறவதே இலங்கையின் இன ஒடுக்கலுக்கான மற்றொரு படியாகும். இதனை மீண்டும் மீண்டும் நிரூபிக்கின்ற வகையில் நடைபெற்று வருகின்ற அரசாங்கத்தின் பாதுகாப்பு சார் இறுக்கங்கள் மென்மேலும் தமிழ் மக்களை அவர்களின் நோக்கம் சார்ந்த தீவிரமாக முன்நோக்கிக் கொண்டு செல்லத் தூண்டும்.

யுத்தத்தின் போது இறந்த உறவுகளை நினைவேந்துகின்ற நடவடிக்கையான மாவீரர் நாள் என்பது தமிழர்களின் உரிமை சார்ந்த போராட்டங்களில் மரணித்தவர்களை நினைவு கூருகின்ற ஒன்றேயென்பது அவர்களின் ஆழ்மன எழுச்சி சார்ந்ததாகும்.

இலங்கையின் அதிகார வர்க்கம் எடுத்துவருகின்ற தடையுத்தரவுகளை வழங்குதல், ஆலயங்களின் வழிபாடுகளைத் தடுத்து உத்தரவுகளைப் பெற்றுக் கொள்ளுதல் போன்றவைகளெல்லாம் ஏன் நடைபெறுகின்றன என்பதற்கான விளக்கமின்மை தமிழர்களின் பூர்வீகப் பிரதேசங்களில் காணப்படுகின்றன.

இதனையொட்டி, கடந்த வாரத்தில் சூடான பல விடயங்கள் நடைபெற்றிருந்தன. ஆவற்றில் ஒன்று வடக்கு, கிழக்கு ஆயர்களது நினைவேந்தலுக்கான பொது நாள் அறிவிப்பு. இது பெரும் பிரச்சினையாகவே வடக்கு கிழக்கு தாயகத்தில் மாத்திரமல்ல, புலம்பெயர்ந்த தேசங்களிலும், தமிழர்களது உரிமைசார் விடயத்தில் சம்பந்தப்பட்ட நாடுகளிலும் பொறி கிளப்பியிருக்கிறது.

மற்றொன்று நவம்பர் 27ஆம் திகதி, தங்களது உறவினர்கள், சக நண்பர்கள் அடக்கப்பட்ட இடத்தில் நாங்கள் விளக்கேற்றி, அதில் விழுந்து அழுது, எங்களது கவலைகளை ஞாபகப்படுத்த அந்த தினத்தில் விளக்கேற்ற அனுமதிக்குமாறு முன்னாள் போராளிகள் மனித உரிமை ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்ததாகும்.

நினைவேந்தல்களுக்கும் பாரம்பரியமான விடயங்களுக்கும் வேறுபாடுகளைக்கூடத் தெரிந்துகொள்ள முயலாத வகையில் நடைபெறும் சில சம்பவங்கள் தமிழ் மக்கள் மத்தியில் கவலைகளையே ஏற்படுத்துகின்றன.

கார்த்திகை தீபம் என்பது ஒரு பாரம்பரியமான நிகழ்வாகும். அவ்வாறான நிகழ்வுகளுக்குக் கூட தடைகளைத் தாண்டியே நாம் செயற்பட வேண்டும் என்பதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வியாழக்கிழமை விதிக்கப்பட்ட தடையும் கைது விடுவிப்பும் காட்டிநிற்கிறது.

அதேநேரத்தில் மன்னாரில் எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை ஆலயங்களில் பூஜை வழிபாடுகள், தேவாலய திருப்பலிகள் மற்றும் பூஜை வழிபாடுகளில் விடுதலைப் புலிகளின் இறந்த மாவீரர்களின் நினைவேந்தல்கள் இடம் பெற உள்ளதாகவும் கூறி மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளடங்கலாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் இணைந்து வெள்ளிக்கிழமை (19) மன்னார் நீதிமன்றத்தில் விசேட விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்த நிலையில் குறித்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் இந்த வேறுபாடுகளைக் களைய வேண்டிய கட்டாயத்தினையே காட்டிநிற்கின்றது. தேவாலயங்களில் இடம் பெறும் திருப்பலிகள் மற்றும் ஏனைய ஆலயங்கள் சிலவற்றில் இடம்பெறும் பூஜை வழிபாடுகளைக் கூட தங்களது பேரினவாதச் சிந்தனையின் அதிகாரத்தின் மூலம் தடை செய்ய எத்தனிப்பானது அடக்குமுறையாகும் என்ற விளக்கமின்மைக்குக் காரணம் பேரினவாதத்தின் இனவாதச் சிந்தனையே என்பது கூட தமிழர்களுக்குப் புரியாத விடயமா என்றே இந்த இடத்தில் கேள்விளைக் கேட்டுக் கொள்ள முடியும்.

தற்போதைய சூழலில் கடந்த இரண்டு வருடங்களாக கொவிட்-19 தொற்றைக் காரணங்காட்டி சுகாதார வழி நடைமுறைகளுக்கு அமைவாக என்ற குறிப்பை இட்டு தடுக்க முனைகின்ற தன்மை காணப்படுகிறது. அதற்கு முன்னர் நடைபெற்ற வேளைகளில் பாதுகாப்புப் பிரச்சினையாக கலவரம், மக்கள் கூடுவதால் ஏதேனும் அசம்பாவிதங்கள் நடைபெற்று விடும் என்று காரணங்களைக் கற்பிக்கின்றமைக்கும் அதே பேரினவாதச்சிந்தனையே பின்புலமாக இருக்கிறது.

ஆலயங்களில் நடைபெறுகின்ற பூஜை வழிபாடுகள் காரணமாக கொவிட் தொற்று பரவி விடும் என்று கூற முனைவதானது அவர்களது இயலாமையையே காட்டி நிற்கின்றது.

இலங்கையில் ஈழம் என்ற வார்த்தையையே மறைத்துவிட முனைகின்ற தமிழர்கள் கூட உருவாகி வருகின்ற நிலைமையும் இலங்கையின் பேரினவாத அடக்கு முறைகளால் ஏற்பட்டு விட்டது. இது தமிழர்களுக்கு ஒரு பலவீனமாகவே பார்க்கப்பட வேண்டும். தமிழர்களின் உண்மையான பூர்வீக வரலாறுகளை மறைக்கும் பாரிய நிகழ்ச்சித் திட்டத்திலேயே சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள் செயற்பட்டு வந்திருக்கிறார்கள். அது மறைத்து வைக்கின்ற ஒன்றல்ல. அதன் தொடர்ச்சியே இப்போதும் நடைபெற்று வருகிறது. இருந்தாலும் தமிழர்கள் தடைகளுக்கு மத்தியில் அந்த வரலாற்று உண்மைகளை உயிர்ப்புடன் அடுத்த தலைமுறைக்கு கடத்த வேண்டிய தார்மீக கடமையை கொண்டுள்ளனர் என்பதே யதார்த்தமானது.

இந்த இடத்தில்தான் அண்மையில் ஆயர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையானது பேசு பொருளாக மாறியிருக்கிறது. தமிழர்கள் தாம் வாழும் சம காலத்து வரலாற்று நிகழ்வுகளையே திரிபுபடுத்தும் அபத்தமான காரியங்களில் இறங்கி விடக் கூடாது. காரணம் வரலாறு என்பது நிகழ்வுகள் நடந்த சம காலத்திலேயே பதிவு செய்யப்பட்டு ஆதாரப்படுத்தபட வேண்டும். அதுவே எதிர்காலத்தில் அதன் உண்மைத் தன்மைகளை உறுதி செய்யும். இவ்வாறான உண்மைகளை தொழில் நுட்ப முறைகளினால் மாற்றியமைக்க முடியாது என்பது அரசியல் தரப்புகளது கருத்துகளாக இருக்கின்றன.

தமிழர்களின் விடுதலைப் போராட்ட உண்மைகளை சம காலத்திலேயே மாற்றியமைத்தால் இனத்தின் வரலாற்று இருப்புக்கு பாரிய பின்னடைவாக அமைவது மாத்திரமல்ல விடுதலைப் போராட்ட உண்மைகள் மறைக்கப்பட்டு விடும் என்பது பேரினவாதத்தின் எதிர்பார்ப்பு.

1948 ஆண்டில் இருந்து இன்று வரை தொடரும் பேரினவாத அடக்குமுறைகள் அதனால் ஏற்பட்ட போராட்டங்கள், அழிவுகள், தியாகச் செயற்பாடுகள் யாவும் திரிபுபடுத்தப்படுவதானது எதிர்கால சந்ததிகளின் வரலாற்று அறிதலை இல்லாமல் செய்துவிடலாம். இருந்தாலும் தடைகளுக்கு மத்தியில் அதனை முன்னகர்த்த முனைகின்ற போது ஏற்படுகின்ற பிரச்சினைகளும் சேர்த்தே இளைய தலைமுறைக்கும் உலகிக்கும் சொல்லப்படப் போகின்றன என்பதனை இந்த இடத்தில், பேரினவாதத் தரப்பு மறந்துவிடுகிறது.

வடக்கு கிழக்கில் வாழும் அனைத்து தமிழர்களும் இனத்தின் விடுதலைப் போராட்டத்திற்கும் இன ஒற்றுமைக்கும் தமிழன் என்ற அடையாளத்துடன் பணியாற்றியதை யாரும் மறந்து விடமாட்டார்கள். இவ்வாறான சூழ்நிலையில்தான் வடக்கு கிழக்கு ஆயர்களின் ஒன்றியம் எடுத்த முடிவும் பார்க்கப்படுகிறது. அந்தவகையில்தான் அந்த முடிவும் மீள் பரிசீலனை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கையும் அழுத்தமும் வெளிவருகிறது.

யுத்த காலங்களின் இடம்பெயர்வுகள், புலம்பெயர்வுகள் கொடுத்த வலிகள், சுமைகள், இன்னல்கள், கொடுமைகள் மறக்கப்படுதல் தமிழர்களை ஆற்றுப்படுத்துவதாக அமைந்தாலும், அவற்றினூடாக அவை நடைபெறவேண்டும் என்பதே முழுமையான பெறுமதியைக் கொண்டுவருவதாக அமையும்.


யுத்தகாலத்திலும் அதற்கு பின்னதான மக்களின் புனர்வாழ்விலும் ஆயர்களது பணியை வெறும் வார்த்தைகளால் சொல்ல முடியாது. அவை மிக அளப்பரிய பணி என்பதனைத் தமிழ்மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். இருந்தாலும் தற்போதைய கால கட்டத்தில் நடைபெற்றிருக்கின்ற பாரதூரமான நகர்த்தலானது திட்டமிட்டுச் செய்யப்பட்டதேயன்றி அவசரத்திலோ கவனக்குறைவிலோ நடந்தேறியதல்ல என்பதனாலேயே இவ்வாறான வேண்டுகோள்கள் வெளிவருகின்றன.

உண்மையில் இந்த விடயத்தில் வெளிப்பட்டு நிற்பதானது தமிழர்கள் தமக்குள் முரண்படும் நிலையை அடைந்துவிட்டார்கள் என்பதே. பொது வெளியில் விமர்சிப்பதும் பொதுவெளியில் விளக்கமளிப்பதும், மாற்றுச் சிந்தனைகள் வெளிப்படுவதும் ஜனநாயகச் சூழலுக்கு முக்கியமானதொன்றாகும். அவ்வாறானதொரு முரண்படுதல்கள் ஆரோக்கியமான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்குமென்றாலும் நிதானத் தன்மையுடையவர்களுக்கு இது பொருந்தாது என்பதே இந்த இடத்தில் சொல்லக் கூடியதாகும்.

தமிழர்களைப் பொறுத்தவரையில், மே 18 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை, நவம்பர் 27 மாவீரர் நாள் உள்ளிட்ட நினைவேந்தல்கள் அந்தந்தக் காலங்களில் நடத்தப்படுதலே பொருந்தும். ஒடுக்குமுறைகளிலும், அடக்குமுறைகளிலும் தத்தளித்துத் தவித்துக் கொண்டே கடந்த பல தசாப்தங்களைத் தாண்டிவிட்ட தமிழர்களின் மனங்களின் ஆழத்திலிருக்கும் நெருடல்களைக் கொட்டித் தீர்ப்பதற்குக்கூடச் சந்தர்ப்பம் வழங்கப்படாத நாட்டில் நல்லிணக்கம், சமத்துவம் எவ்வாறு உருவாக்கப்படும் என்பதே மிகப்பெரும் கேள்வி.

## கடிதங்கள்

### கூனித்தீவு வீதியை புனரமைக்க கோரிக்கை



திருகோணமலை மாவட்டம், மூதூர் பிரதேச சபைக்கு உட்பட்ட, கூனித்தீவு பிரதான வீதி, குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இவ்வீதியால் பிரயாணம் செய்வது மிகக் கடினமாக உள்ளதால் வீதியை புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் வீதியானது, நீண்டகாலம் புனரமைக்கப்படாமல் உள்ளது. இவ் வீதியூடாக தினமும் பிரதேச மக்களும் விவசாயிகளும் வாகன சாரதிகளும் பாடசாலை மாணவர்களும் சென்று வருகின்ற நிலையில் பெரிதும் சிரமப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மாரி மழைக் காலத்திலும் ஏனைய காலங்களிலும் பொதுமக்கள் இவ்வீதியூடாக சென்றுவரமுடியாது சிரமப்படுகின்றனர். குறிப்பாக, அவசர சிகிச்சையை பெற்றுக்கொள்ள செல்கின்றவர்களும் கர்ப்பிணித் தாய்மார்களும் பாரிய சிரமங்களை எதிர்நோக்கிச் செல்லவேண்டியுள்ளது என்றும் மழைக் காலங்களில் இந்த வீதியால் முற்று முழுதாகப் பிரயாணம் செய்ய முடியாதுள்ளது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து உள்ளூர் அரசியல்வாதிகளிடமும், அதிகாரிகளிடமும் பல தடவைகள் முறையிட்டும் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

–எஸ்.எல். நௌபர்



### பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள்:

# பூனைகள் உறங்கும் அடுப்புகள்



அ . அச்சுதன்



நாட்டில் தற்போதய விலைவாசி உயர்வால், சாதாரணமாக இரண்டு பேர் உழைக்கின்ற குடும்பத்தினரே, குடும்பத்தைக் கொண்டு நடத்தத் தத்தளித்துக் கொண்டிருக்கும் போது, நிரந்தர வருமானம் இல்லாமல், குடும்பத்தின் பிரதான உழைப்பாளியை இழந்து நிற்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் நிலை, , நாம் கற்பனை பண்ணி பார்க்க முடியாதளவுக்கு மனதை உருக்குவதாகக் காணப்படுகின்றது.

நாம் வாழும் சமூகத்தில், நமக்கருகில் இவ்வாறான பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் இருந்தாலும், நமக்குள்ள வேலைப்பழு காரணமாக அவர்கள் குறித்துச் சிந்தித்து, அவர்களுக்கு உதவ மறந்து வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

இவ்வாறு, நமது உறவினர்கள், அயல் வீட்டார், கிராமத்தவர், ஊர்க்காரர் என இவர்களில் பலர் அனுபவிக்கின்ற பல சவால்களையும் அவர்களின் வாழ்வாதாரத்தில் எதிர்நோக்கின்ற சிக்கல்களையும் பாராமுகமாக கடக்கின்றோம்.

நம் மத்தியிலே வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களில், பெண் தலைமைத்துவ குடும்பம் , குடும்பத் தலைவனை கோர யுத்தத்தால் இழந்த பெண் தலைமையிலான குடும்பம், கைவிடப் பட்டவர்களால் ஏற்பட்ட பெண் தலைமை தாங்கும் குடும்பம் எனப் பல வகையிலான பெண் தலைமை தாங்கும் குடும்பங்களாக இவர்கள் வாழ்ந்து வந்தாலும், இவர்கள் அனைவரும் தமது ஜீவனோபாயத்தை எவ்வாறு கொண்டு செல்கிறார்கள் என்று, நாம் ஆழ்ந்து சிந்திப்பதில்லை.

“ஆண்களுக்கு இணையாக, வங்கியிலே கடன் பெற்று, மேட்டு நிலப் பயிர்ச் செய்கை மேற்கொண்டால், விளைந்ததை அறுவடை செய்து விற்பனை செய்யும் போது, போதிய வருமானம் இல்லாமல் கடன் சுமையில் சிக்க வேண்டியுள்ளது.” இது, மட்டக்களப்பு மாவட்டத்தின் கொம்மாதுறை கிராமத்தில் வசிக்கும் பெண் தலைமை தாங்கும் குடும்பப் பெண் சொன்ன கருத்தாகும்.

“நான், கணவனால் கைவிடப்பட்டு 15 வருடங்களாகிறது. மேட்டு நிலப்பயிரச் செய்கையை மேற்கொண்டு வருகின்றேன். எங்களுடைய கிராமத்தில் இருந்து பயிர்ச் செய்கை மேற் கொள்ள ‘தீவு’ என்ற பகுதிக்குச் செல்ல வேண்டும். அங்கே இம்முறை அரை ஏக்கர் காணியில் உழுந்து பயிரிட்டேன். வழமையாக எனக்கு விளைச்சல் ஓரளவு இருக்கும். இதை வைத்து எனது குடும்பத்தின் உணவுத் தேவையை போக்கி விடுவேன். மிகுதியான செலவுகளுக்கு தினக் கூலியாகச் சென்று, செலவுகளைச் சமாளித்துக் கொள்வேன். ஆனால், இம்முறை ஐந்தில் ஒரு பங்கே அறுவடையில் கிடைத்தது. இதிலே யானை அடித்து நாசமாக்கியது போக, மிகுதியை வீட்டுக்குக் கொண்டு வந்ததோம். கடையில் ஒரு கிலோ உழுந்து 1,000 ரூபாய் விற்பனை செய்யும் போது, என்னிடம் உள்ள உழுந்தை கடைக்கரர் 500 ரூபாய்க்கே கொள்வனவு செய்தார். வங்கியில் பெற்ற கடனை அடைக்க, காதிலே போட்டிருந்த தோட்டை அடகு வைத்து, கடனைச் செலுத்தினேன்” என்றார் அந்தக் குடும்பத்துக்குத் தலைமை தாங்கும் பெண் கண்ணீருடன்!

“யானையால் அழிவு ஏற்பட்ட விவசாயிகளுக்கு, அரசாங்கத்தால் நிவாரணம் வழங்குவதாக அரச உத்தியோகத்தர்களால் பதியப் பட்டிருந்து, எம்மிடம் இருந்து வங்கிக் கணக்கு இலக்கத்தையும் வாங்கிச் சென்றனர். இதுவரை, வங்கிக் கணக்குக்கு ஒரு பணமும் வைப்பிலிடப்படவில்லை” என்று மேலும் தெரிவித்தார்.

“அதேபோல, பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்காக, அரசாங்கத்தாலோ, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்தோ, எனது தொழிலை முன்னேற்றவோ, தொடர்ந்து செய்வதற்கோ எந்த உதவியும் கிடைக்கவில்லை. கொரோனா காலப் பாதிப்பிலிருந்து மீண்டு வந்து விவசாயத்தை செய்யலாம் என்று இருக்கையில், தற்போது உரம் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உரிய நேரத்தில் பயிருக்குத் தேவையான உரம், கிருமி நாசினிகள் இடாவிடில், இது அறுவடையை மிகவும் பாதித்து, எம்மை மீண்டும் மீண்டும் கடனாளியாகவும் வாழ்வாதாரத்தை இழந்தவர்களாகவும் வைத்துவிடும்” எனவும் அவர் வேதனையுடன் தெரிவித்தார்.

ஊடகங்கள் வாயிலாக, பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் தமது தொழிலை சிறப்பாக நடத்துவதற்கு அரசு மற்றும் அரச சாரா நிறுவனங்கள் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதாக அறிகின்றோம். ஆனால், அவை உரியவர்களுக்கு கிடைக்கின்றதா என்ற சந்தேகம், இவரைப்போல எந்த உதவியும் இன்றி வாழும் பெண் தலைமையிலான குடும்பங்களில் வாழும் பெண்களின் அவலநிலையைக் காணும்போது ஏற்படுகின்றது.

விவசாய திணைக்களத்தால், விவசாயத்துக்கு வழங்கப்படும் வரப்பிரசாதாரங்களும் கூட, பெண்கள் என்பதாலோ என்னவோ இவர்களுக்குக் கிடைப்பதில்லை என்றே பரவலாக அறியமுடிகிறது.

இதேபோல, இப்பிரதேசத்தில் உள்ள இன்னுமொரு பெண் தலைமை தாங்கும் குடும்பப் பெண்ணைச் சந்தித்த போது, அவர் உணவு மற்றும் சிற்றுண்டி வியாபாரத்தை, தனது வாழ்வாதாரமாக மேற்கொண்டு வருகின்றார். இவர், மூன்று பிள்ளைகளின் தாயாவார்.

அவர் சொல்கிறார், “கொவிட் தொற்றுக்கு முன்னர், கோவில்களின் உற்சவம் நடைபெறுகின்ற போது, அங்கு சென்று தற்காலிக கடைகளை அமைத்து, பக்தர்களுக்கு உணவு, சிற்றுண்டி பதார்த்தங்கள் போன்றவற்றைத் தயாரித்து விற்பனை செய்து எனது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வந்தேன். கொரோனா தொற்று உருவாகிய காலம் முதல், கோவில் உற்சவங்கள் நடை பெறாத காரணத்தால், இந்தத் தொழில் முற்று முழுதாக இல்லாததால், நான் தற்போது மிகவும் கஸ்டப்படுகின்றேன். நானும் பிள்ளைகளும் அன்றாட வாழ்க்கைச் செலவைக் கூட சமாளிக்க முடியாதவர்களாக இருக்கின்றோம். பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு, ஒரு தொழிலை மேற் கொள்வதற்கு எந்த ஒரு விதத்திலும் உதவித் திட்டமோ, மானியத் திட்டமோ இல்லாதமை ஒரு குறையாகவே உள்ளது. இதனால் சுய தொழிலை மேற் கொண்டு சாதிக்க கூடிய பல பெண்கள், வீடுகளிலேயே இருந்து, தமது திறமைகளை வெளிக் கொணர முடியாதவர்களாக முடங்கிப் போகின்றார்கள்” என்றார்.

எனவே, பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதரத்தை விருத்தி செய்ய, மகளீருக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சு மற்றும் சிறு கைத்தொழில் திணைக்களம் ஆகியன இணைந்து, மறுசீரமைக்கப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன் அது சிறப்பாக நடைபெறுவதற்கு தொடர் கண்காணிப்பும் இருக்க வேண்டும். இத்தகைய திட்டங்களுக்கு இந்தச் சமூகத்தில் வாழும் ஒவ்வொரு பொறுப்புள்ள ஜீவனும் ஒத்துழைப்பு நல்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

### மீளக்குடியேறியது முதல் தொடரும்

# ‘ஓலைக் குடிசை’ வாழ்க்கை

ஹஸ்பர் ஏ ஹலீம்



திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட, கும்புறுப்பிட்டி கிழக்கு நாவற்சோலை கிராமம், 1965களில் மாதிரிக் கிராமமாக இருந்து, பின்னர் 1977களில் மக்கள் குடியேற்றம் இடம்பெற்றது.

நாவற்சோலை கிராமத்தில், 1996 வரை மக்கள் வாழ்ந்து வந்த நிலையில், யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தனர். உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்கள், 2006ஆம் ஆண்டு மீள்குடியேற்றி, தற்போது இக்கிராமத்தில் வசிக்கிறார்கள்.

தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த 569 குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகிறார்கள், இவற்றில் 20 குடும்பங்கள், யுத்த சூழ்நிலை காரணமாக இந்தியாவுக்குச் சென்று, 2010இல் மீண்டும் தமது சொந்தக் கிராமத்தில குடியேறினார்கள்.

அன்றாட கூலித் தொழில் மூலமாக ஜீவனோபாயத்தை கொண்டு செல்லும் இம்மக்களில் அதிமானோர், ஒலை குடிசைகளிலும் தகரக் கொட்டில்களிலும் வாழ்ந்து வருகிறார்கள். நாவற்சோலை கிராமத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளில் சிலர், கப்பல் துறை, கந்தளாய் ஆகிய இடங்களில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள்.

ஆரம்ப கல்வியுடன் பாடசாலைக் கலிவியைக் கைவிட்டவர்களாகவே இந்தக் கிராமத்தில் அதிகமானவர்கள் உள்ளார்கள். கிராமத்தில், இரண்டு அரச உத்தியோகத்தர்கள் மட்டுமே காணப்படுகிறார்கள். அவர்களுள் ஒருவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்; மற்றொருவர் தபால் ஊழியர்.

74 குடும்பங்கள் தகரக் கொட்டில், ஒலை குடிசை என தற்காலிகமாக வாழ்ந்து வருவதுடன் 59 குடும்பங்கள் காணி, வீடு இன்றி உறவினர்களின் வீடுகளில் வாழ்கிறார்கள்.

தற்போதைய நிலையில், தற்காலிக வீடுகளில் வசிப்போர், போதிய வருமானமின்மை காரணமாக, நிரந்தர வீடுகளைச் சுயமாகக் கட்ட முடியாத நிலையில் வாழ்ந்து வருகிறார்கள்.

நாவற்சோலை கிராம மக்களில், பெரும்பாலானோரின் பிரதான ஜீவனோபாயத் தொழில்களாக சிறு கடற்றொழில், கூலித் தொழில் என்பனவே உள்ளன. இக் கிராமத்தில் வசிக்கும் குடும்பங்களில் 16 பேர், முன்னாள் போராளிகளாக இருந்து புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயமாக்கப்பட்டவர்களாவர்.

அரசாங்கம் மூலமாக, பல அபிவிருத்தி செயற்பாடுகள் நடை முறைப்படுத்தப்பட்டாலும் கூட, வீட்டுத் திட்ட அபிவிருத்தியில் இந்த பகுதியில் ஈடுபாடு காட்டுவது குறைவாகவே உள்ளது.

இங்கு வசிக்கும் புனர்வாழ்வளிக்கப்பட்ட குடும்பத்தில், ஒரு குடும்பம் கடந்த ஒன்றரை வருட காலமாக, தம்பதிகளாக தடுப்புக் காவலில் இருந்துள்ளார்கள். பல்வேறு இடங்களில், ஒரு குடும்பத்துக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள், அரசாங்கத்தால் வழங்கப்பட்டன. ஆனால், இங்கு கணவன், மனைவி இருவரும் ஒரு குடும்பம் என்ற காரணத்தால், இருவருக்குமாகச் சேர்த்து, ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் மூலமாகப் புனர்வாழ்வு பெற்று, சமூகமயமாக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், கால் நடை வளர்ப்பு (ஆடு, மாடு), சுயதொழில் உபகரணங்கள், விவசாய உபகரணங்கள் என ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான உதவிகள், புனர்வாழ்வு ஆணையகம் ஊடாக வழங்கப்பட்டன. ஆனாலும், வீட்டுத் திட்டம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் தொடர்பில், முழுமையாக எந்தக் கவனமும் செலுத்தப்படவில்லை.

“ஒவ்வொரு வட்டாரத்துக்கும் மூன்று வீடுகள் வீதமே கிடைக்கப் பெறுகிறது. சிலரிடம் காணிக்கான ஆவணங்கள் இன்மையும் காணப்படுகிறது. எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் வீட்டு திட்டம் வழங்கப்படும்” என குச்சவெளி பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.எம். நாசிக் தெரிவித்தார்.

“பல்வேறு துன்பங்களுடன் 11 வருச காலமாக, இந்தக் கறையான் கொட்டிலில், சிறு பிள்ளைகளுடன் வாழ்கிறோம். பலமுறை வீடு கேட்டு, கோரிக்கை விடுத்த போதிலும் அந்தக் கதை, அவ் விடத்திலேயே முடிந்து விடுகிறது. இந்தக் குடிசை வாழ்க்கையில், பிள்ளைகளை வெக்கையில் வைத்து, தினமும் வருத்தம் தான் வருகிறது. மழை, வெயில் காலங்களில் நிம்மதியாகத் தூங்க முடியாது. பத்து வருட கால நிரந்தர வீட்டு கோரிக்கை நிறைவேறவில்லை. டிஎஸ் ஒபிஸ் ஊடாக வெறும் 20 ஆயிரம் ரூபாய் மாத்திரமே கிடைக்கப்பெற்றது” என புனர்வாழ்வு பெற்ற இரு பிள்ளைகளின் தாயான செல்வராசா செல்வகுமாரி (வயது-35) தெரிவித்தார்.

ஆனால், குறிப்பிட்ட இந்தக் குடும்பத்துக்கு, அரசாங்கத்தால் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டதாக குச்சவெளி பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

“2009இல் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில், 2011.09.30 அன்று திருமணம் செய்து, இதே கிராமத்தில் தகரக் கொட்டிலில் 10 வருட காலமாக வாழ்ந்து வருகிறேன். எனது கணவன் ஒரு கூலித் தொழிலாளி. ஆறு இலட்சம் ரூபாய் அளவில், அரசினால் வழங்கப்படும். மிகுதி மூன்று இலட்சம் தங்களுடைய சொந்தப் பணத்தைச் சேர்த்து, கல் வீடு கட்டித் தருவதாக, கிராமத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்த நிலையில், கோரிக்கை கடிதம் புகைப்படம் வழங்கப்பட்டு, ஒன்பது மாதங்கள் கடக்கின்றன. எந்த முடிவும் இல்லை .தற்போது சீட்டுக் காசு சொந்த பணத்தில், ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய் செலவில், கொட்டிலுக்கு அருகில், அத்திவாரம் போடப்பட்டுள்ளது. மிகுதி பணம் இல்லை. கஷ்டமான நிலையில் உள்ளோம். கல் வீடும் கிடைக்கப்பெறவில்லை” என, ஒரு பிள்ளையின் தாயான மோகன குமார் ராகினி (வயது-27) தெரிவித்தார்.

இது தொடர்பில், அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பிரதிநிதியான குச்சவெளி பிரதேச சபையின் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் நாகேஸ்வரன் ஜெயகாந்தனிடம் வினவிய போது, “மக்கள் வீடின்றி கொட்டில்களில் வாழ்ந்து வருகிறார்கள். இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சம்மந்தன் ஐயாவிடமும் சொல்லியிருக்கிறோம் அரசிடம் கேட்டு சொல்வதாக சொன்னார். புதுசு புதுசாதான் திட்டங்களை செய்கிறார்கள். ஆனால் கடந்த நல்லாட்சி அரசாங்கம் செய்த வீட்டு திட்டத்தை கைவிட்டு விட்டார்கள். எந்த விதமான அபிவிருத்திகளோ உட்கட்டமைப்பு வசதிகளோ இங்கு கிடைப்பது மிக அரிதாகவே உள்ளது. எல்லாவற்றிலும் ஏனைய பிரதேசங்களை விட இப் பிரதேச மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள்” என்றார்.

யுத்த சூழ்நிலை காரணமாக மீள் குடியேற்றப்பட்ட மக்களுடைய பல வருட கால எதிர்பார்ப்புகள் இங்கு நிறைவேறவில்லை. குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தமிழ்ச் சமூகத்தை அதிகம் கொண்ட பிரதேசம் என்றால், இந்தக் கிராமமே எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. அரச சார்பற்ற நிறுவனமாக ‘வீட்ஸ்’ எனும் நிறுவனம் மாத்திரமே இங்கு பணிபுரிகிறது இவர்கள் கூட, சிறுவர் உரிமைகள் தொடர்பான திட்டம் ஊடாக பணியாற்றி வருகிறார்கள். ஆனாலும் இங்கு வீட்டுத் திட்டங்கள் தொடர்பிலான முன்னெடுப்புகள் எதுவும், இவ்வாறான அரச சார்பற்ற அமைப்புகளால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவர்களிடம் அது பற்றிப் பேசிய போது, நிதிப் பிரச்சினையை காரணமாக முன்வைத்தனர்.

புதிதாக திருமண பந்தத்தில் இணைந்து, குடும்ப வாழ்க்கையை ஆரம்பிக்கும் பலர், வீடு, காணிகள் இன்றி சிக்கல் நிலை தோன்றுகின்றது. இதனால், இம் மக்களின் வீடில்லாப் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வைப் பெற முடியாமல் உள்ளது.

இக்கிராம மக்களின் மீள் குடியேற்ற நிலைவரம் தொடர்பில், கிராம சேவகர் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரை அணுகிய போது, “தகவல்களை எனக்கு மேலுள்ள அதிகாரிக்குத் தெரியாமல் தரமுடியாது” என்றார்.

மக்கள் தமது உரிமைகளைப் பெற, உரித்துடையவர்களாகவும் அவற்றை வெளியிடுவதற்கு ஊடகங்களுக்கு உரிமை உள்ள போதிலும் அவ்விரண்டும் இங்கு மறுக்கப்படுகிறன.

தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பில், குச்சவெளி பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டதுடன் குறித்த பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு வினவியபோது, உரிய கிராம சேவகர் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தருக்குச் சொல்வதாகக் கூறப்பட்டது.

மக்களின் பிரச்சினைகளை நிரந்தரமாகவும் வெளிப்படையாகவும் தீர்ப்பதற்கு மக்களுக்காகவே அரசாங்கம் என்ற நிலை காணப்பட வேண்டும்.

இதே கிராம மக்கள், வீடில்லாப் பிரச்சினை மட்டுமல்லாது, உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாததன் காரணமாக, சீரான பாதையின்மை, குடிநீர் இன்மை காரணமாகவும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

மக்களின் இவ்வாறான நிலைமைகளை அரசியல் உயர்மட்டத்தில் உள்ளவர்களும் மக்கள் பிரதிநிதிகளும் நன்கு உணர்ந்துள்ளனர். இருந்தாலும் இது தொடர்பில் முழுமையான கரிசனை காட்ட அவர்களால் முடியவில்லை. காலம் காலமாக தேர்தல் காலங்களில் மாத்திரம் அள்ளி வீசப்படும் வாக்குறுதிகளே எஞ்சுகின்றன. இம் மக்களின் தொடரும் அவல வாழ்க்கைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பது யார்?



அகில இலங்கை கிராமிய கலை ஒன்றியத்தின்

# கலைஞர்கள் கௌரவிப்பு விழா



அகில இலங்கை கிராமிய கலை ஒன்றியம் நடத்திய கலைஞர்கள் கௌரவிப்பு விழா, கொழும்பு -11, கதிரேசன் மணி மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (14) நடைபெற்றது. ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் எனத் தமது வாழ்வை அத்துறைகளில் அர்ப்பணித்தவர்கள் கௌரவிக்கப்பட்ட இந்நிகழ்வில், பிரதம அதிதிகளாக புரவலர் ஹாசிம் உமர், 'தினகரன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டு, ஊடகவியலாளர்களையும் கலைஞர்களையும் வாழ்த்திக் கௌரவித்தனர்.

























மறையும் நிலங்கள்; தவிக்கும் மக்கள்:

# மூதூரில் மூர்க்கம்



எப். முபாரக்



திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கடற் கரையோரப் பிரதேசங்களில், தீவிரமடைந்து வரும் கடலரிப்பின் காரணமாக, பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை மக்கள் இழந்து வருவதோடு, மீனவத் தொழில் நடவடிக்கைகளும் பாரியளவில் பாதிக்கப்பட்டு வருகின்றது.

மூதூர் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடலரிப்பின் காரணமாக, இது வரை 400 மீட்டர் வரையிலான நிலப்பகுதிக்குள் கடல் உட்புகுந்துள்ளதாக பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

அண்மைக்காலமாக, மூதூர் பிரதேசத்தில் மிகத் தீவிரம் அடைந்துள்ள கடலரிப்பு காரணமாக, கருவாட்டு உற்பத்தியாளர்களின் பெறுமதியான தொழில் தளங்கள், வாடிகள், பெறுமதியான அரச கட்டடங்கள் என்பன கடலுக்கு இரையாகி வருவதாக, பாதிக்கப்படும் மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

மூதூர் கரையோரப் பிரதேசங்களில் இவ்வாறு கடலரிப்பு தீவிரமடைவதற்கு, பொதுவாக சுனாமி ஏற்படுத்திய அதிர்வால், புவித் தட்டுகளில் ஏற்பட்ட இடைவெளிகளின் காரணமாக, அலைகளின் வேகம் அதிகரித்துள்ளதாகவும் இந்நிலைமையால் கடலரிப்பு தீவிரமடைந்துள்ளதாகவும் புவியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, மூதூர் கடற்கரை வலயம், முருகைக் கற்கள், பாறைகள் ஆகியவற்றைக் கொண்ட பகுதியல்ல. இதனால் வன்மையான தரை இல்லாமையால் இவ்வாறான கடலரிப்புக்கு பிரதான காரணமாக அமைவதாக புவியியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், உலக காலநிலை மாற்றத்தினால் கடல் நீரோட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், மகாவலி கங்கையின் நீர் இறுதியாக, கங்கையினுடாக மூதூர் கடலில் சங்கமிப்பதால், நாளாந்தம் இப்பிராந்தியத்தின் கடல் மட்டம் உயர்வடைந்து, கடலரிப்பை மேலும் தீவிரப்படுத்துகிறது எனவும் கூறப்படுகின்றது.

2003ஆம் ஆண்டு காலப்பகுதியில், கடலரிப்பைத் தடுக்கும் ஆரம்ப நடவடிக்கையாக, கம்பியினாலான கூடுகளில் கற்கள் இடப்பட்டு, கரையை நோக்கி 70 மீற்றர் வரையான பகுதிகளில் நிலத்தைத் தோண்டி கற்கூடுகள் பதிக்கப்பட்டன. ஆனால், இந்த முயற்சி வெற்றியளிக்க வில்லை. சுனாமியின்போது, கற்கூடுகள் சேதமாக்கப்பட்டதோடு, கடற்கரையின் வன்மையான தட்டுகளும் அரிக்கப்பட்டன. இதனால், ஒரேயடியாகக் கடற்கரையின் சுமார் 75 மீற்றர் தூரம் கடலுக்குள் உள்ளீர்க்கப்பட்டது.

அதன்பின்னர், 2015 ஆண்டளவில், இரண்டாம் கட்டமாக கற்களிலான தடுப்பு சுவர் அமைக்கப்பட்டது. ஆனால், தடுப்புச்சுவர் முழுமைபெறாத காரணத்தால், தடுப்பு சுவர் அமைக்கப்படாத ஏனைய பகுதிகள், கடந்த காலத்தைவிடவும் மிகவும் பாரிய அளவில், கடலரிப்புக்கு உள்ளாகி வருகின்றது.

அத்தோடு, அண்மைக்காலமாக கருவாட்டுத் தொழிலின் தீவிர அதிகரிப்பின் காரணமாக, கரையோரத்தில் காணப்படும் தாவரங்களும் பெருமளவு புங்கை மரங்களும் அழிக்கப்படுவதனாலும் கடலரிப்பு துரிதமடைவதற்கு பிரதான காரணமாகக் கருதப்படுகின்றது.

## எவ்வாறு குறைக்கலாம்?

கடலரிப்புக்கு நிரந்தர தீர்வைக் காண வேண்டுமானால், கடற்கரையோரப் பகுதிகளில் பாரிய அளவிலான தடுப்பு கற்சுவர்களையும், கண்டல் தாவரங்கள், தென்னை உட்பட ஏனைய மரங்களை வளர்க்கும் நடவடிக்கையை உரிய தரப்பினர் ஆரம்பிக்கும் பட்சத்திலும் அத்தோடு, அவற்றை உரியவாறு பராமரிப்புக்கு உட்படுத்துவதற்கும் கடற்கரையோர பாதுகாப்புத் தொடர்பில் மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கடலரிப்புத் தாக்கத்தை நீண்ட காலத்துக்குக் குறைப்பதற்கு, ஏற்கெனவே மூதூர் பகுதில் பாரிய அளவிலான கற்கள் அமைக்கப்பட்ட வேலைத்திட்டத்தினை மீண்டும் முழுமையடைவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்,

குறிப்பாக பேருவளை, மொரட்டுவ, பாணந்துறைப் பிரதேசங்களும் இவ்வாறு கடலரிப்பினால் பாதிக்கப்பட்டு இருந்தன. அந்த இடங்களில் பெரிய பாறாங்கற்களை இட்டதன் மூலம், கடலரிப்பு பெருமளக்குத் தடுக்கப்பட்டது. இதற்காக, நெதர்லாந்து, சுவீடன் போன்ற நாடுகளின் நிதியுதவிகள் பயன்படுத்தப்பட்டன.

ஆனால், மிக நீண்ட காலமாக வடக்கு, கிழக்கு பகுதிகளில், முறையான நடவடிக்கை எடுக்காதன் விளைவாக, கடலரிப்பு தொடர்கதையாகக் காணப்படுகின்றது ,

கடலரிப்பு என்பது, கடற்கரை ஓரங்களில் ஏற்படும் சாதாரணமானதோர் இயற்கை நிகழ்வாகும். ஆனால், இது சுழற்சி முறையில் நடப்பதால் பாதிப்புகள் ஏற்படுவதில்லை. அதாவது, ஓரிடத்தில் அலைகளால் அரிக்கப்படும் மணல், இன்னோரிடத்தில் படியும். பின்னர், காற்றின் திசையும் கடலின் நீரோட்டமும் மாறும் போது, மணல் படிந்த இடத்தில் அரிப்பு ஏற்பட்டு, அந்த இடத்திலிருக்கும் மணல், முன்னர் கடலரிப்பு ஏற்பட்ட இடத்தில் படியும். இதன்போது, கடலரிப்பால் ஏற்பட்ட பாதிப்பு, சீராகி விடும். இது இயற்கையாக மாறி மாறி நடைபெறும்.

ஆனால், இந்த இயற்கை செயல்முறையில், அசாதாரண நிகழ்வுகள், குளறுபடிகள் என்பன ஏற்படுமாயின், அரித்தலும் படிதலும் தொடர்ச்சியாகவும் தீவிரமாகவும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும். இதுதான் மூதூர் உட்பட திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இருந்தபோதிலும், இந்தக் கடலரிப்பின் தீவிரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, மூன்று தீர்வுகளை, புவியாளர்கள் முன்வைக்கின்றனர்.

முதலாவது, மீன் முள் அமைப்பில், கடற்கரையோரத்தில் ஒரு கட்டுமானத்தை மேற்கொள்வதாகும். அதாவது, கடற்கரையோரத்துக்கு சமாந்தரமாக, ஒரு கட்டுமானத்தைச் செய்து, அதிலிருந்து குறுக்காக மேலும் சில கட்டுமானங்களை மேற்கொள்வதாகும். இதன்போது, மணலை அலைகள் அரித்து, வேறோரிடத்தில் படிய வைக்கும் செயன்முறை தடுக்கப்படும்.

இரண்டாவது, கடலரிப்பால் அலைகள் எடுத்துச் செல்லும் மணல் எங்கு படிகிறதோ, அந்த மணலை கனரக வாகனங்கள் மூலம் ஏற்றிக் கொண்டு வந்து, மீண்டும் அரிக்கப்பட்ட இடத்தில் கொட்டுவதாகும்.

மூன்றாவது, அலைத் தடுப்புகளை உருவாக்குதல் ஆகும். இத்தகைய செயற்பாடே, மூதூர் பகுதிக்கு சாத்தியமானதாகும். இதுவே 2015இல் ஆரம்பிக்கப்பட்டது. இதனை கரையோர பாதுகாப்பு திணைக்களம் முதற்கட்ட நடவடிக்கையாக, மூதூர் பிரதேசத்தில் நான்கு இடங்களில் கருங்கல்லிலான தடுப்பு சுவர்களை அமைத்து, கடலரிப்பின் தீவிரத்தைக் குறைத்தது.

ஆனால், கற்கள் போடப்படாத மீதமுள்ள மூதூர் கரையோர பகுதி முழுவதும் கடற்பாதுகாப்பு தடுப்பு சுவரை விஸ்தரித்து, கருவாட்டு உற்பத்திக்குப் பயன்படுத்துவதோடு, மீன்பிடி உபகரணங்களைப் பாதுக்காப்பதற்கும் தரித்தலுக்குமான பகுதியாக அமைப்பதாகும்.

உதாரணமாக, வாழைச்சேனையில் காணப்படுவதை ஒத்ததாக, மூதூர் கடற்கரைக்கு அருகிலுள்ள இயற்கையான ஆற்றுக்கு படுக்கையின் ஆழத்தை அதிகரித்து, அதனூடாகத் தோணிகள், மீன்பிடி படகுகளை உள்நகர்த்தி, நங்கூரமிடலுக்கான திட்டமும், மீன் வாடிகளை அமைப்பதற்கு உரிய நடவடிக்கையை உரிய அதிகாரிகள் செயற்படுத்த வேண்டும்.

இவ்வாறான திட்டங்கள் வகுக்கப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில், மூதூர் கரையோர அரித்தல், நிரந்தரமாகத் தடுக்கப்படுவதுடன் , மூதூர் பிரதேச மீனவரின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுவதுடன் கருவாட்டு தொழில் விருத்திக்கும் வாய்ப்பாக அமையும். இதனூடு, இலங்கையின் பொருளாதரத்துக்கும் வலுச்சேர்ப்பதாக அமையும்.

எத்தகைய திட்டங்களும் வகுக்கப்படாமல், செயற்படுத்தப்படாமல் கடலரிப்பு இவ்வாறு தொடருமானால், மூதூர் கடற்கரையோரப் பிரதேசங்கள் பெரிதும் பாதிப்படையக் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொள் வேண்டும்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 20 நவம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.